பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

WINSTAR
JOB BANK
021 320 2749

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 19, திங்கட்கிழமை 04.09.2017 | கதிர் 302



# எந்தத் தளபதியின் மீதும் கைவைக்க இடமளியேன்!

## சு.க.மாநாட்டில் ஜனாதிபதி சூளுரை


கொழும்பு, செப்ரெம்பர் 04

ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் மீதோ அல்லது எந்தவொரு இராணுவ தளபதியின் மீதோ அல்லது நாட்டின் இராணுவத்தினரின் மீதோ கைவைக்க எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை என்று சூளுரைத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்றுப் பிற்பகல் கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக்கம் 18 »




## புதிய அரசமைப்புத் தொடர்பாக யாழில் தெளிவுபடுத்தல் கூட்டம்

### தமிழ் மக்கள் பேரவை நாளை ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.4

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 'ஓர் அரசியல் தீர்வை எதிர்கொள்ளல்' என்ற தலைப்பில் புதிய அரசமைப்புத் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் யாழ். வீரசிங்கம்மண்டபத்தில்நடைபெறவிருக் கின்றது.

தலைமையுரையை பேரவையின் இணைத் தலைவர்என்றமுறையில் வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்

பக்கம் 18 »

## ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக 'சனல் - 4' விவரணப் படம்

கொழும்பு, செப்.4

ஜெனரல்ஜகத்ஜயசூரியவுக்குஎதிராகபிரித்தானியாவின் 'சனல் – 4' தொலைக்காட்சி விவரணப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரேஸில் நீதிமன்றத்தில் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக யுத்தக் குற்றம்

பக்கம் 18 »

# உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் இறைமையை உறுதிப்படுத்தும் தீர்வு

## அதற்கே முயல்கிறோம் என்கிறார் சம்பந்தன்
## நேற்று அமிர் நினைவு தின உரையில் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.4

"எமது தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அவர்களின் இறைமையை உறுதிப்படுத்தும் ஒரு தீர்வுக்காகவே நாங்கள் கடுமையாக முயன்று வருகின்றோம்.

"எங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு, நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் எமக்குப் போதியளவு சுயாட்சி கிடைக்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

தமிழர் விடுதலைக் கூட்

பக்கம் 18 »



# யுத்தம் முடிந்தும் யுத்தத்துக்கான காரணம் நீடிப்பு!

## அமைச்சர் மனோ விசனம்

"இந்த நாட்டில் யுத்தம் முடிந்துள்ளதாகக் கூறப்பட்டாலும் அந்த யுத்தத்திற்கான மூலகாரணம் அப்படியே உள்ளது.அதற்கு எந்த முடிவும் காணப்படவில்லையென தேசிய சகவாழ்வு மற் றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவரது அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடமாடும் சேவையின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான நடமாடும் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில்

பக்கம் 18 »



# புலிகளுக்கு எதிரான வழக்குகளை; வவுனியா நீதிமன்றில் இருந்து மாற்றச் சதி!

வவுனியா, செப். 04

போர்க்கைதிகளாக பிடிக்கப்பட்ட, படையினரைப் படுகொலை செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மூவருக்கு எதிராக சாட்சியம் அளித்த இருவர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளது.



போரின் இறுதி நாள்களில் விடுதலைப் புலிகளிடம் போர்க்கைதிகளாக இருந்த 18 இராணுவத்தினர் மற்றும் 8 கடற்படையினரைப் படுகொலை செய்தார்கள் என்று வவுனியா மேல் நீதிமன்றில் மூன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி- முல்லைத்தீவு வீதியில் உள்ள விக்டர் முகாம் -4 இல் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இராணுவத்தினர் இந்த முகாமை நெருங்கி வந்த போது, இவர்களைக் கொன்று விடுமாறு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், முகாமின் பொறுப் பாளராக இருந்த கோபிக்கு உத்தரவிட்டார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து, அயலில் உள்ள காடுகளில் விறகுகள் சேகரிக்கப்பட்டு பெரும் தீ வைக்கப்பட்டது. கண்கள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக நிறுத்தப்பட்ட படையினர், சுடப்பட்டு, அவர்களின் சடலங்கள் தீயில் எரிக்கப்பட்டதாக, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.

இதன்போது விறகுகளைச் சேகரிக்க உதவியவர்கள் என்று கூறப்படும் இரண்டு சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் ஆகியோருக்கு எதிராக, வவுனியா மேல் நீதிமன்றில் கொலைச்சதி, கொலைகளுக்கு உதவினார்கள், உடந்தையாக இருந்தார்கள் என்று மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தற்போது, அனுராதபுரசிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளனர்.

இந்த வழக்கு செப்ரெம்பர் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, எதிரிகள் மூவரையும், சாட்சிகளையும் முன்னிலையாகுமாறு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி சசிமகேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, குற்றம்சாட்டப்பட்ட மூவருக்கு எதிராக சாட்சியம் அளித்த இரண்டு சாட்சிகளுக்குமே தற்போது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதுகுறித்து பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், இந்த விசாரணைகளின் அடிப்படையில் அளிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையிலேயே, வவுனியாவுக்கு வெளியே இந்த வழக்கை மாற்றுவது குறித்து சட்டமா அதிபர் முடிவு செய்வார் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக, வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து இந்த வழக்குகளை மாற்ற முயற்சி எடுக்கப்பட்ட போது, மூன்று சந்தேக நபர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதையடுத்து, வழக்குகளை வவுனியாமேல்நீதிமன்றிலேயே விசாரிக்க வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி நாள் குறித்திருந்தார். இந்த நிலையில், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் விசாரணைகளை ஆரம்பித்து, வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து வழக்கை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெனரல் ஜயசூரியவுக்கு ஆதரவாக அமைச்சர்கள்; சரத் பொன்சேகாவின் கருத்து தனிப்பட்டதாம்!

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய போர்க்காலத்தில் குற்றங்களை இழைத்தார் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியமை, அவரது தனிப்பட்ட கருத்தே என்று அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்கவும், ருவான் விஜேவர்த்தனவும் தெரிவித்துள்ளனர்.



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கருத்து தொடர்பாக, கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன-

இது அவரது தனிப்பட்ட கருத்தேயன்றி அரசின் கருத்து அல்ல. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும், ஜெனரல் ஜயசூரியவுக்கும்இடையிலானகருத்து வேறுபாடே இதற்குக் காரணம்.

இந்த சர்ச்சைகளுக்கு ஜனாதிபதி தலையீட்டில் தீர்வுகாணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பில் மற்றொரு செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சிறிலங்கா அமைச்சர் மஹிந்த சமரசிங்க-

போரின் போது, ஜெனரல் ஜயசூரிய குற்றங்களில் ஈடுபடவில்லை. ஜெனரல் ஜயசூரியவுக்கு ஆதரவாக அரசு செயற்படும்.

சரத் பொன்சேகாவின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தே தவிர அரசின் கருத்து அல்ல.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அமைச்சரவையில் இதுபற்றிவிவாதிக்கப்படவில்லை. ஒரு போதும் இராணுவத்தினரை காட்டிக்கொடுக்கமாட்டோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமைச்சர்சம்பிக்க ரணவக்கவும், ஜெனரல்ஜயசூரியவுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வழக்கு தாமதங்களை தவிர்க்க நடவடிக்கை என்கிறார் தலதா!



கொழும்பு, செப். 04

நீதிமன்றங்களில் இடம் பெறும் வழக்கு விசாரணைகளின் தாமதங்களைதவிர்க்க அவசியமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனநீதி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தனித்தன்மையை பாதுகாக்கும் முகமாக அவசியமானநடவடிக்கைகளை தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரிப் பிரதேசத்தில்இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் தலதா அத்துகோரள இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

## ஏ 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் பௌத்த பிக்குனி பலி 7 பேர் காயம்!



யாழ் - கண்டி வீதியான ஏ 9 வீதியில் திறப்பனைபிரதேசத்தில்அலிஸ்தான் வளைவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பௌத்த பிக்குனி ஒருவர் கொல்லப்பட்டமையுடன், பிக்கு உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என திறப்பனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலப்பனை கீர்த்தி பண்டாரா ராமயவில் வாழ்ந்து வந்த 65 வயதனா பிக்குனியே சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

வலப்பனையிலிருந்து அனுராதபுரத்திற்கு யாத்திரையாக வந்த தவர்கள் பயணித்த வான் வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வாகனத்தில் 11 பேர் பயணம் செய்துள்ளனர். படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## பொலிஸ் திணைக்களத்தின் ஆண்டு நிறைவு; இந்து ஆலயத்தில் வழிபாடு நடத்தினார் பூஜித்!

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கொழும்பில் இந்து மத பிரார்த்தனைகள் நடைபெற்றுள்ளன.





இந்தப் பிரார்த்தனைகள் நேற்று காலை பம்பலப்பிட்டி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் நடத்தப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் நடைபெற்ற இந்த பிரார்த்தனைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி பெற்று வரும் பொலிஸ் உத்தி யோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆலயத்தில் நடைபெற்ற பூஜைகளில் கலந்து கொண்டு வழிபாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களிலும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்வுகள்நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். - காரைநகர் வீதிகள் காப்பெற் வீதியாக மாறாதா?

## பொதுமக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 04

யாழ். - காரைநகர் பெருந் தெருக்கள் எவையும் காப்பெற் வீதிகளாகப் புனரமைக்கப்படாமை தொடர்பாக மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் ஏனைய பெருந்தெருக்கள் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ள நிலையில் காரைநகர் பெருந் தெருக்கள் மாத்திரம் ஏன் புனரமைக்கப்படவில்லை எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய் ஊடாக காரைநகர் செல்லும் 782 வழி இலக்க வீதி, நவாலி ஊடாகச் செல்லும் 786 வழி இலக்க வீதி மற்றும் கல்லுண்டாய் ஊடாகச் செல்லும் 784 வழி இலக்க வீதி போன்ற எவையுமே காப்பெற் வீதியாக்கப்படவில்லை.

இதனால், தினமும் வாகனங்களில் பயணிப்போர் குறிப்பாக, இரு சக்கர, மூன்று சக்கர வாகனங்களில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மானிப்பாய் ஊடாகக் காரைநகருக்கு பயணிக்கும் வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தெரிவித்திருந்தது. ஆனால், தற்போது அது தொடர்பாக எதுவித முன்னகர்வுகளையும் காண முடியவில்லை. எனவே, மேற்படி வீதிகளை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம)

# ஜப்பானின் நிதி உதவியுடன் கண்டியில் தொழிற்பேட்டை

## பிரதமர் ரணில் தகவல்

கண்டிப் பிரதேசத்தில் ஜப்பானின் நிதியுதவியின் கீழ் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் எதிர்கால சமூகத்தினரை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்ய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

குருநாகல் மகுறு-ஓய வத்த என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய தேசிய பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்த விடயங்களைக் கூறினார்.

நாட்டின் கைத்தொழில் துறையில் தற்போது பாரிய அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எதிர்காலச் சமூகத்தினருக்காக நாட்டில் பாரிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அடிப்படை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் தொழிற்பேட்டை ஒன்றும், சிலாபம் பிரதேசத்தில் சுற்றுலா வலயமொன்றும் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரதமர் இதன்போது சுட்டிக் காட்டினார் என்பது குறிப்பிடத் தக்கது. (ம)

# புளியங்கூடலில் 32 வருடங்களின் பின் நேற்று மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி



ஊர்காவற்துறை - புளியங்கூடலில் 32 வருடங்களுக்குப் பின்னர் நேற்று மாட்டுவண்டிச் சவாரி போட்டி மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. புளியங்கூடல் புதுவெளி சவாரித்திடலில் இப்போட்டி நடைபெற்றது.

மாட்டுவண்டிச் சவாரியில் பங்குபற்றும் மாடுகளைத் துன்புறுத்தக்கூடாது, அவ்வாறு துன்புறுத்தப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனையுடனேயே போட்டி இடம்பெற்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி போட்டியில் பங்குபற்றிய மாடுகள் ஏறக்குறைய, 10 தொடக்கம் 18 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், முதல் இடத்தைப் பெற்றவருக்கு அரைப் பவுண் தங்க மோதிரமும் பரிசாக வழங்கப்பட்டது. (ம)

# ஊடகவியலாளர் குருநாதன் மறைவுக்கு யாழ். ஊடக அமையம் அனுதாபம்

யாழ்ப்பாணம், செப்.04

இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர்களில் ஒருவரான சின்னையா குருநாதனின் மறைவுக்கு யாழ். ஊடக அமையம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தின் அனுதாப அறிக்கை வருமாறு,

கடந்த 2016ஆம் ஆண்டு வரை 58 வருடங்களாக அந்தத் துறையில் இடையறாது தனது பணியை மேற்கொண்டு வந்த அவர், தினபதி, சிந்தாமணி, சூடாமணி, வீரகேசரி, தினக்குரல் மற்றும் உதயன் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளிலும் தமிழ் நெட் ஆங்கில இணையத்தளத்திலும் அர்ப்பணிப்புடன் அவர் பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதுங்கு குழியில் இருந்து ஊடகப்பணி யாற்றியதை தனது சகபாடிகளது மரணத்தை இறுதிக்காலத்திலும் அவர் இளம் ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்து கொள்ள பின்னின்றதில்லை.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போதும் தனது ஊடகப்பணியை விட்டு தப்பியோடாது முழுநேரமாக ஊடகப்பணியாற்றிய ஒரு சிலரினுள் அமரர் சின்னையா குருநாதனின் பெயரும் ஈழ தமிழ் ஊடக வரலாற்றில் நிலைத்திருக்கும்.

தமிழ், ஆங்கில மொழிகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும் ஆற்றலும், தான் சார்ந்த துறையில் அவர் கொண்டிருந்த பட்டறிவும் அவரை ஒரு சிறந்த ஊடகவியலாளராக சமூகத்தில் இனங்காட்டியிருந் தது.

மறைந்த ஊடகவியலாளர் தராகி சிவராமின் நன்மதிப்பைப் பெற்றிருந்த ஒருசில ஊடகவியலாளர்களுள் சின்னையா குருநாதனும் ஒருவராவார். தனது மரணம் வரையில் ஊடகவியலாளனாக இருந்துவிட அவர் கொண்ட ஆசை நிறைவேறியிருக்கின்றது.

இறுதிக்காலத்தினில் தனித்து போயிருந்த அந்த மூத்த ஊடகவியலாளனை யாழ். ஊடக அமையம் தேடிச் சென்று தன்னால் இயன்ற உதவிகளைச் செய்திருந்தது. இப்போது அறிக்கைகள் விடுத்துக்கொண்டிருக்கும் அரசியல் தரப்புக்கள் அவரைத் திரும்பிக்கூடி பார்த்திருக்கவில்லை யென்ற தகவலையும் அவர் கவலையுடன் பகிர்ந்து கொண்டதையும் வெளிப்படுத்தவேண்டியேயுள்ளது.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் யாழ். ஊடக அமையம் தனது கவலைகளை பதிவு செய்து கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மரணித்த நண்பர் நினைவாக சுன்னாகத்தில் இரத்ததானம்

சுன்னாகம், செப்.04

சுன்னாகம் - ஐயனார் இளைஞர் கழகத்தின் முன்னாள் உறுப்பினர் அமரர் ப. கிசோக் ஞாபகார்த்த இரத்ததான முகாம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினரின் அனுசரணையுடன் இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

ஐயனார் இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில், ஐயனார் இளைஞர் கழகத் தலைவர் ரவிச்சந்திரன் காமராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமை, சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். செல்வக்குமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பாலசந்திரன் கஜதீபன், உடுவில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ். அனுசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இங்கு 28 வரையான இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். இரத்ததானம் வழங்கிய இளைஞர்கள் அனைவருக்கும் பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சக நண்பனை நினைவு கூர்ந்து இளைஞர்கள் முன்வந்து இரத்த தானம் வழங்கியுள்ளமையைப் பலரும் பாராட்டியுள்ளனர். (ம)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன் நேற்று தாக்குதலுக்கு உள்ளானார் என அவரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமுமான அமரர் அ. அமிர்தலிங்கத்தின் மகன் அ.பகீரதன் மற்றும் வலி.தென் மற்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் கௌரிகாந்தன் ஆகிய இருவருமே தன்னைத் தாக்கினர் எனவும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அமரர் அமிர்தலிங்கத்திற்கு எதிரான துண்டுப்பிரசுரம் ஒன்றை விநியோகித்தபோதே அவர்கள் தன்னைத்தாக்கினர் என பரமேஸ்வரன் தெரிவித்த போதிலும், அந்தக் குற்றச்சாட்டை அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் முற்றாக மறுத்துள்ளார்.

அமரர் அமிர்தலிங்கத்தின் 90 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் உரையாற்றினர். அந்த நிகழ்வின் போது ஊடகவியலாளர் பரமேஸ்வரன் அரசியல் விடயங்கள் கலந்த துண்டுப் பிரசுரம் ஒன்றை அங்கிருந்தவர்களுக்கு வழங்கியுள்ளார்.

1979ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் ஏன் அதனை எதிர்த்து வாக்களிக்கவில்லை எனவும், அந்தச் சட்டத்தாலேயே தமிழ் இளைஞர், யுவதிகள் ஏராளமானோர் பெரும் அவலங்களை எதிர்கொண்டனர் எனவும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்து.

இதையடுத்து, அங்கிருந்த மேற்படி கௌரிகாந்தன் மற்றும் பகீரதன் ஆகியோர் தன்னை அந்த மண்டபத்திற்கு வெளியே அழைத்துச் சென்று தாக்கினர் என பரமேஸ்வரன் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அ.பகீரதனிடம் நேற்றிரவு தொடர்பு கொண்டு கேட்டபோது, "அவர் யார் என எனக்குத் தெரியாது. கையில் துண்டுப் பிரசுரங்களை வைத்து அதை விநியோகித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு துண்டுப் பிரசுரம் கொடுக்க வேண்டாம் என நான் கூறியது டன் அவரிடம் இருந்து அவற்றை வாங்கினேன். அதன் பின்னர் அங்கு நின்ற சிலர் அவரை வெளியே அழைத்துச் சென்றனர்" என்றார்.

தான் தாக்கப்பட்டார் என பரமேஸ்வரன் கூறிய குற்றச்சாட்டு தொடர்பாகக் கேட்டபோது, "அவ்வாறு அவர் தாக்கப்பட்டமை எனக்குத் தெரியாது. அந்தச் சம்பவத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை." - என்றார் பகீரதன். (ம)

# அம்பாந்தோட்டையில் ஒருவர் வெட்டிக்கொலை

அம்பாந்தோட்டை, செப்.04

அம்பாந்தோட்டை பல்லே மலல பிரதேசத்தில் நேற்றிரவு ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

'பதகிரியே சோக் சுத்தா' என அழைக்கப்படும் ரத்னாயக்க மனப்பிரிகே சமில (வயது-34) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சடலம் நேற்றிரவு அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. அம்பாந்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம)







# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இலங்கை அரசுகளிடம் நீதி கிடைக்காது

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள், இனவழிப்புச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு நீதி, நியாயம் தேடும் எத்தனங்கள் இலங்கை அரசின் கீழ் என்றைக்குமே சாத்தியமாகப் போவதில்லை என்பது இப்போது வெளிப்படையாகவும், பளிங்கு போலவும் தெளிவாகி வருகின்றது.

இந்த விவகாரத்தில் இலங்கையின் - குறிப்பாகத் தென்னிலங்கை ஆட்சித் தரப்பின் - சிங்களத் தலைமையின் - போக்கு விநோதமாகவும் விபரீதமாகவும் இருக்கின்றமைதான் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

யுத்தத்தின் முடிவில், இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட அப்போதைய பாதுகாப்புச் செயலாளர், யுத்தத்தில் சிவிலியன் பாதிப்பு பூச்சியம் என்றார். சிவில் பொதுமக்களில் எவருமே பாதிக்கப்படாத வகையில் - அவர்களின் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தப்படாமல் - யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டதாக அவர் சொன்னார்.

தமிழர்கள் அனைவரையுமே புலிகளாகக் கருதிய அவர், அப்படிக் கூறியமையில் வியப்பில்லைதான்.

ஆனாலும், தமிழர்கள் அனைவரையும் புலிகளாகக் காட்டி அவர்கள் முழுப் பேரையும் அழித்து விட முடியாமல் போன நிலையில், தமிழ்ப் பொதுமக்களும், சிவிலியன்களும் தங்களின் ஆட்சியில் உள்ளார்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது தென்னிலங்கை.

அந்த சிவிலியன்கள் யாரையும் தமது சிங்களப்படை கொல்லவேயில்லை என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் போட்டு மறைத்தது அது.

காலம் செல்லச் செல்ல, அதுவும் சரிவராமல், சர்வதேச அழுத்தங்கள் தீவிரமடைய, பொதுமக்கள் யாருக்கும் தீங்கிழைக்கப்படவில்லை, அப்படி யாருக்கேனும் தீங்கிழைக்கப்பட்டிருந்தால் அது குறித்து விசாரிக்கப்படும் என்றது தென்னிலங்கை.

அண்மையில் பதவியேற்ற புதிய இராணுவத் தளபதியும், புதிய கடற்படைத் தளபதியும் கூட இதனைத்தான் திரும்பத் திரும்பக் கூறினார்கள்.

யார் குற்றமிழைத்திருந்தாலும் அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும். சட்டம் தன் கடமையைச் செய்யும், தவறிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவர் என்றுதான் இருவரும் கூறினார்கள்.

அவர் அப்படிக் கூறியமையை சிலாகித்து நாம் எழுதிய மை காய்வதற்குள், போர்க்குற்றம், மனித உரிமைகளுக்கு எதிரான குற்றம், இனவழிப்புக் குற்றம், சித்திரவதைக் குற்றம் ஆகியவை ஓர் இராணுவத் தளபதிக்கு எதிராகவே சுமத்தப்பட்டள்ளன.

அந்த இராணுவத் தளபதி, வன்னிப் படைகளின் தளபதியாக இருந்து யுத்தம் முடிவுறும் சமயத்தில் இழைத்த மேற்படி இன்னோரன்ன குற்றச் செயல்கள் குறித்து, அச்சமயம் இராணுவத் தளபதியாக இருந்த தற்போதைய அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே போட்டுடைத்து அம்பலப்படுத்தியுள்ளார்.

ஜெனரல் ஜெகத் ஜயசூரிய குறித்து, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்வைத்துள்ள தகவல்கள் வெகு ‘ஸிம்பிளாக’ புறக்கணிக்கத்தக்கவையல்ல.

ஏற்கனவே, சரத் பொன்சேகா வெள்ளைக் கொடி விவகாரத்தை அம்பலமாக்கி, அதன் விளைவாகப் பல நெருக்கடிகளைச் சந்தித்தவர்.

இப்போது ஜெகத் ஜயசூரிய பற்றிய தகவலை அவர் வெளியிட்டதும் அவர் மீது எகிறத் தயாராகி விட்டது தென்னிலங்கைச் சிங்களம்.

“சரத் பொன்சேகா கூறியவை அவரது சொந்தத் தகவல். அதற்கும் அரசுக்கும் தொடர்பு ஏதுமில்லை. அரசு எமது நாட்டு இராணுவத்தின் எவரையும் காட்டிக்கொடுக்காது.” - என அடித் துக் கூறியிருக்கின்றனர் நல்லாட்சி அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர்கள்.

“யுத்தத்தில் எந்தப் போர்க்குற்றமும் இழைக்கப்படவேயில்லை. ஆகவே, யுத்தக் குற்றம் என்ற பெயரில் யார் மீதும் - எந்தப் படையினர் மீதும் - விசாரணை நடத்த அரசு இடமளிக்காது”- என அவர்களில் பலர் வெளிப்படையாகவே பிரகடனப்படுத்தி வருகின்றனர்.

ஆக, தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் உட்பட எந்தக் குற்றங்கள் குறித்தும் இந்த நல்லாட்சி அரசு விசாரித்து, நீதி, நியாயத்தை நிலைநாட்டப் போவதில்லை என்பது அதன் அமைச்சர்களின் உரைகளால் தொடர்ந்தும் தெளிவுபடுத்தப்பட்டே வருகின்றது.

ஆகவே, இந்த அரசை நம்பி, இதுவரை பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நீதி, நியாயம் கிட்டும் என்று எண்ணி, தொடர்ந்தும் காத்திருப்பது அர்த்தமேயற்றது என்பதைத்தான் அமைச்சர்களின் இக்கூற்று உள்ளார்ந்து உறுதிப்படுத்துகின்றது.

ஒருபுறம் படைகளுக்குத் தலைமை வகித்த முன்னாள் இராணுவத் தளபதி இங்கு யுத்தக் குற்றம் இழைக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ள -

மறுபுறம் அப்படி ஏதுமே இங்கு நடக்கவில்லை. அவ்வாறு மக்கள் யாரும் பாதிக்கப்படவேயில்லை, அப்படியான விவகாரம் குறித்துப் படைகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எப்போதுமே எடுக்கப்படவே மாட்டாது என அரசின் மூத்த அமைச்சர்கள் மாறி, மாறி உறுதிபட அறிவிக்கின்றனர்.

இத்தகைய அமைச்சர்களைக் கொண்ட நல்லாட்சி அரசின் மூலமாகத் தமிழ் மக்கள் தமக்கு நீதி, நியாயம் கிட்டும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமன்று வேறில்லை.

# இலங்கை கொத்துரொட்டியை விரும்புகிறாராம் கனேடியப் பிரதமர்!




இலங்கையில் தயாரிக்கப்படும் கொத்துரொட்டி மீது கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஈர்ப்புக் கொண்டுள்ளார் என அந்த நாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

டொரொண்டோவின் மிகப் பெரிய தெரு விழாக்களில் ஒன்றான தமிழ் திருவிழா நடைபெற்றது.

2 லட்சம் பேரின் பங்களிப்புடன் நடைபெற்ற திருவிழாவுக்கு கனேடியப் பிரதமர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

Scarborough, Markham தெருவில் மக்கள் கூட்டத்தின் மத்தியில் சமைக்கப்பட்ட பல தமிழ் உணவுகளில் ஒன்றை சுட்டிக்காட்டி கொத்து ரொட்டி சிறப்பாக வருகின்றமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் எனக் கனேடியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

30 ஆண்டுகளாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகள் குடியேறிய Newfoundland பகுதிக்கு கனேடிய பிரதமர் சென்றுள்ளார்.

தமிழர்களுக்கும் இலங்கை தீவின் சிங்களப் பெரும்பான்மைக்கும் இடையிலான யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போதிலும், 2010 ஆம் ஆண்டு கனடாவின் கரையோரங்களில் தஞ்சம் கோருவோர்களின் கப்பல்களின் வருகை அதிகரித்துள்ளது.

எனினும், இலங்கை நீண்டகால சமாதானத்தை இன்னும் அடைந்து விடவில்லை என கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அங்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு நாள் கொண்டாட்டத்தின்போது தமிழ் கனேடிய சமூகத்தின் சாதனைகளுக்கு கனேடிய அரசியல்வாதிகளும் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

# லக்ஸபான, குக்குளுகங்கை வான்கதவுகள் திறக்கப்பட்டன!





லக்ஸபான மற்றும் குக்குளுகங்கை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, நாட்டின் பல பாகங்களிலும் அதிக மழை பெய்து வருவதால் லக்ஸபான மற்றும் குக்குளுகங்கை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

லக்ஸபான நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறக்கப்பட்டுள்ளதால் களனி கங்கையை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, அதிக மழை காரணமாக குக்குளுகங்கையின் நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளில் ஒன்று திறக்கப்பட்டுள்ளதால் அதனை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அந்த நிலையம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (க)

# வாகன விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் 19 பேர் காயம்!

கொழும்பு, செப். 04

மஹாரகம நாவின்ன சந்தியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 19 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதில் ஒரு மாணவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர மாணவர்களே இந்த விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 11.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தலங்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்றுவிட்டு, மீண்டும் பல்கலைக்கழக விடுதிக்கு அவர்கள் திரும்பியபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் பயணம் செய்த பஸ், மோட்டார் வாகனமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்த பஸ் 65 மாணவர்கள் பயணித்தனர் என்றும் தெரிவிக் கப்படுகிறது.

இந்த நிலையில், விபத்து தொடர்பில் பஸ் மற்றும் மோட்டார் வாகன சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாத்தளையில் கோர விபத்து: ஒருவர் பலி; 11 பேர் காயம்!



கொழும்பு,செப். 04

தம்புள்ளை, மாத்தளை பிரதான வீதியின் பன்னம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானமையுடன் 11 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது.

கண்டியில் இருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்த பஸ், வான் ஒன்றுடன்மோதியதினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க)

## நாளை

05.09.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் பி.ப. 1.28 வரை
திதி : சதுர்த்தசி பி.ப. 12.56 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 3.05 – 4.35 வரை

## கீதா குமாரசிங்கவிடம் நேரில் மஹிந்த சுகம் விசாரிப்பு



கொழும்பு, செப். 04

தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் நலன் விசாரிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொழும்பு தனியார் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

வீட்டில் எரிவாயு சிலிண்டர் ஒன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் கீதா குமாரசிங்க காயமடைந்தார். இதன் காரணமாக அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வரை அவசர சிகிச்சை பிரிவில் கீதா சிகிச்சை பெற்று வந்துள்ளார் என அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# புதிய அரசமைப்புக்கு எதிராக கோட்டாவின் 'எலிய' அமைப்பு



கொழும்பு, செப். 04

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ 'எலிய' (வெளிச்சம்) என்ற பெயரில் புதிய சிவில் சமூக அமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளார்.

பொரலஸ்கமுவில் உள்ள கோல்டன் ரோஸ் விடுதியில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி மாலை 5 மணியளவில், இந்த அமைப்பின் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது.

புதிய அரசமைப்பு என்ற போர்வையில் நாட்டை ஒன்பது துண்டுகளாக கூறு போடும் முயற்சிகளைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த அமைப்பை கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த அமைப்பின் ஆரம்ப நிகழ்வில் இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷ, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் புலமையாளர்கள், துறைசார் விற்பன்னர்கள் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில், மெடகொட அபயதிஸ்ஸ தேரர், கோட்டா பய ராஜபக்ஷ, சட்டவாளர் மனோகர டி சில்வா, நியர் அட்மிரல் சரத் வீரசேகர, மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் மத்திய வங்கிய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் தாமரா குணநாயகம், கலாநிதி தயான் ஜெயதிலக, மருத்துவ நிபுணர் சீதா அம்பேபொல உள்ளிட்டோர் உரையாற்றவுள்ளனர்.

# 151 ஆவது பொலிஸ் தின நிகழ்வு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்!

சாவகச்சேரி, செப். 04

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது பொலிஸ் தின நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கடந்த காலத்தில் உயிர்நீத்த பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. இறுதியில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மரக்கன்று நட்டு வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் அதிகாரிகள், உத்தியோகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நீதிவேண்டி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபை வரை சைக்கிள் பயணம்!




தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தமிழர் படுகொலைகள், திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீதான இன அழிப்புக்கள் என்பவற்றுக்கு சர்வதேச சுயாதீன விசாரணையே நீதியைப் பெற்றுத்தரும் என வலியுறுத்தி மனித நேய சைக்கிள் பயணம் தொடங்கவுள்ளது.

மனித உரிமைகள் ஆலோசனை சபையின் 36ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள காலத்தில் நாளைமறு தினம் 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஐரோப்பிய ஒன்றியம் முன்பாக Bruxelles & Rond Point R Schuman ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேசத்திடம் தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் தமது விருப்பை வெளிப்படுத்த இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாக்கெடுப்பை நடத்தவும், அவ்வாக்கெடுப்பில் புலம்பெயர் தமிழீழ மக்கள் கலந்து கொள்ள ஐக்கிய நாடுகள் சபை ஆவன செய்யவும், இயல்பு வாழ்க்கை உருவாக்கப்பட்டு மக்களின் பேச்சு, நடமாட்ட சுதந்திரங்களை உறுதிப்படுத்தவும் மற்றும் சில முக்கிய கோரிக்கைகளுடன் மனித நேய சைக்கிள் பயணம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் முன்பாக முருகதாஸன் திடலில் நடைபெறவுள்ள மாபெரும் கவனவீர்ப்பு ஒன்றுகூடலிலும் அனைவரையும் கலந்து கொண்டு தங்கள் வரலாற்றுக்கடமையைச் செய்யுமாறும் இந்த ஏற்பாட்டுக்குழு கேட்டுக் கொள்கின்றது.

அந்தவகையில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருவதோடு பிரயாணத்திற்கான முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் இந்த மனித நேய சைக்கிள் பயண ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

# நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக சில மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கே குறித்த மண்சரிவு எச்சரிக்கை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே மண் சரிவு அபாயம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படும் பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கை 24 மணி நேரத்திற்கு அமுலில் இருக்குமென்றாலும் தொடர்ந்து மழை பெய்தால் அந்த எச்சரிக்கை நீடிக்கும்.


இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி கருத்து தெரிவிக்கையில்-

இரத்தினபுரி, நுவரெலியா உட்பட மத்திய மலைநாட்டின் சில பிரதேசங்களிலும் களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களிலும் தற்போது மழையுடன்கூடிய காலநிலை நிலவுகிறது.

எனவே, தேசிய கட்டட ஆய்வு மையம் தற்போதைக்கு கேகாலை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் களுத்துறை மாவட்டத்தில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## தமது தலைமையே; சு.கட்சியின் பொற்காலம் என்கிறார் மஹிந்!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தான் பதவி வகித்த காலம் கட்சியின் பொற்காலம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அதிகளவான ஆசனங்களையும் அனைத்து மாகாண சபைகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றியிருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

காலி, ரத்கம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடங்கப்பட்டது. பண்டார நாயக்கவுடன் தெற்கில் இருந்து டி.ஏ. ராஜபக்ஷவே சென்றார். அப்படி உருவாக்கப்பட்ட கட்சிக்கு தற்போது நாங்கள் தேவையில்லை.

கட்சியின் மாநாடு நடக்கின்றது என்று எனக்கு அழைப்பு வருகிறது. நாங்கள் வேலையற்றவர்கள் தானே.

நான் தலைவராக இருந்த காலமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொற்காலம்.

56 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திரிக்கா கட்சியை என்னிடம் கையளித்தார். அந்த எண்ணிக்கையை நான் 128 ஆக அதிகரித்தேன்.

அனைத்து மாகாண சபைகளையும் கைப்பற்றினோம். 90 வீதமான பிரதேச சபைகள் எங்களிடம் இருந்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உற்பத்தித்துறை பெரு வீழ்ச்சி என பிரதமர் கவலை

கடந்த 2004 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் உற்பத்தித்துறை வீழ்ச்சியடைந்துள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் மேல் நீதிமன்ற வளாகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம் பெற்ற போது இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி 17 சதவீதமாக காணப்பட்டது.

தற்போது அது 10 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

# அரமைப்பு திருத்தம் தொடர்பாக கூட்டமைப்பிற்குள் முரண்பாடா!

## வேண்டாம் என்கிறார் கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார்

மட்டக்களப்பு, செப். 04

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே முரண்பாடான கருத்துக்களுக்கு இடமிருக்கக் கூடாது.

இதே திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன் வைத்திருந்தால் என்ன நிலைப்பாட்டை நாம் எடுத்திருப்போமோ அதே நிலைப்பாட்டைத் தான் இப்போதைக்கும் எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - கறுப்பன் கேணி நாகதம்பிரான் ஆலயத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட பிரதான வாயிலை கையளிக்கும் நிகழ்வின் பின் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பு 20ஆவது திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே முரண்பாடான கருத்துக்களுக்கு இடமிருக்கக் கூடாது.

நாடாளுமன்றத்திலும் சரி, மாகாண சபைகளிலும் சரி அதனைநிராகரிக்க வேண்டும். இதுதான் என்னுடைய நிலைப்பாடு ஆகும். இதனைத்தான் தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு எதிராகக் கடந்த மாகாண சபை அமர்வின் போது தனி நபர் பிரேரணை ஒன்றை முன் வைத்தமைக்காக பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டேன்.

அன்று மாலை சபை கூடிய போதும் நேரமின்மையால் அந்தப் பிரேரணை சபையில் விவாதிக்கப்படவில்லை.

எதிர்வரும் 8ஆம் திகதியுடன் கிழக்கு மாகாண சபைக்கு மக்கள் வழங்கிய ஆணை முடிவடைகின்றது. அதற்கு முதல் நாள் 7ஆம் திகதி கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சரால் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கப்படவிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரிக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

குறிப்பாக, மாகாண சபைகளுக்கு அதிகாரம் வேண்டும் என குரல் எழுப்புகின்ற நாம் ஒரு போதும் இருக்கின்ற அதிகாரத்தை இழக்க முடியாது.

இதே திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன் வைத்திருந்தால் என்னநிலைப்பாட்டை நாம் எடுத்திருப்போமோ அதே நிலைப்பாட்டைதான்இப்போதைக்கும் எடுக்க வேண்டும். அதனை தான் தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் ஜனநாயகத்திற்கு விரோதமாகவோ மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகவோசெயற்படமாட்டாது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் காரணமாகவேவட-கிழக்குஇணைப்பு உள்ளிட்ட மாகாண சபை முறையிலான அதிகார பகிர்வு முறை அரசியல் யாப்பு 13 ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்டது.

ஆரம்பத்தில் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஜே.ஆர் முதல் மஹிந்த வரையில் அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்களினால் கட்டம் கட்டமாக அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

கொஞ்சம் எஞ்சியிருப்பதையும் பறிக்க தற்போது முற்படுகின்றார்கள். கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த வரை எந்தக்கட்சியும் அறுதிப்பெரும்பான்மையுடன்இல்லை. கூட்டு ஆட்சிதான்நடைபெறுகின்றது.

அரசமைப்பின் 20வது திருத்தம் தொடர்பாக ஆட்சியிலுள்ள கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய கட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் பற்றி நாம் பேச முடியாது. அது அவரவர்களது கட்சியுடன் தொடர்புடைய விடயமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை இந்த விடயத்தில் பெரும் பொறுப்புள்ளது. முதலாவது மாகாண சபைக்குரிய அதிகாரத்தைப் பறிப்பதற்கு இடமளிக்க முடியாது.

அடுத்தது வடமாகாணசபை அதனை நிராகரிக்கத் தயாராகியுள்ளது. இதே நிலைப்பாட்டைதான் கிழக்கு மாகாண சபையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத்திலும் அது ஒலிக்க வேண்டும். அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு முன்பு மாகாண சபைகளின் கருத்துக்களைப் பெற்றிருக்க வேண்டும்.

அப்படி நடக்கவில்லை. மாகாண சபைகளின் அங்கீகாரத்துடன்தான் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதாக சர்வதேச சமூகத்திற்கு காட்ட அரசு முற்படுகின்றது.

அதற்காகத் தற்போது மாகாண சபைகளின் அங்கீகாரத்தைக் கோருகின்றது. இரு மாகாண சபைகள் ஏற்கனவே நிராகரித்துள்ளன.

ஒரு மாகாண சபை மட்டுமே ஆதரவு வழங்கியுள்ளது. ஏனைய சபைகளில் தடுமாற்றம் காணப்படுகின்றது. அதனை மாகாண சபைகளிடம் திணிக்க அரசு முற்படுகின்றது.

ஒரே நாளில் தேர்தல் நடைபெற வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் மக்கள் வழங்கிய ஆணைக்குப் புறம்பாக மாகாண சபையொன்றின் ஆட்சி நீடிப்பதோ அல்லது சபையை கலைக்கும் அதிகாரம் நாடாளுமன்றிற்கு வழங்கப்படுவதோ ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு மாகாண சபைகளின் அங்கீகாரம் தேவையில்லை என்று அரசிலுள்ள சில அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் கூறுகின்றார்கள்.

இதேவேளை, மாகாணசபைகள் நிராகரித்தாலும் சரி ஏற்றுக் கொண்டாலும் சரி 2/3 பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் நிறைவேற்றப் படும் என மாகாண சபைகளுக்கு சவால் விடும்வகையில்கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இது அவர்களுடைய கருத்துக்களாக இருந்தாலும் மாகாண சபைகளின் அதிகாரத்தை தங்களால் பறிக்க முடியும் என்ற அதிகார தோறணையில் விடுக்கப்படுகின்ற எச்சரிக்கையாகும் இது. எனவும் கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

## அம்பாறை இறக்காமம் மாயக்கல்லி மலையில் மீண்டும் விகாரை அமைக்கும் முயற்சி!



அம்பாறை, செப். 04

அம்பாறை இறக்காமம் - மாணிக்கமடு, மாயக்கல்லி மலையடிவாரத்தில் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சி மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் புல்டோஸர் வாகனம் ஒன்றின் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமையினால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது என தெரியவருகிறது.



இறக்காமம் மாணிக்கமடு மாயக்கல்லி மலையடி வாரத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி பௌத்த பிக்குகளினால் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது.

புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு பலர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புல்டோஸர் வாகனம் ஒன்றின் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு சிரமதானப் பணிகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த இறக்காமம் பிரதேச பொது மக்களும் தமண பொலிஸாரும் பௌத்த பிக்குகளுடன் வாய்தர்க்கத்தில் ஈடுபட்டமையோடு முறுகல் நிலையும் ஏற்பட்டது.

முஸ்லிம்களின் ஹஜ்ஜுப் பெருநாளான நேற்று முன்தினம் அம்பாறை பிரிவெனா விகாரையைச் சேர்ந்த அம்பேபிடிய சியலரத்ன தேரர் தலைமையில் திடீர்மாயக்கல்லி மலையில் சிரமதானங்களை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பிக்குவின் செயற்பாட்டிற்கு எதிராக முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். அத்துடன் நீதிமன்ற உத்தரவையும் தமண பொலிஸார் பௌத்த பிக்கு விடம் காட்டிய போது அதனை மறுத்து தனியார் ஒருவரின் காணியில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

இதனால் பொது மக்களுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. அதனையடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தலைமையிலான குழுவினர் பேச்சில் ஈடுபட்டு கிழக்கு மாகாண சபையின் பகிரங்க ஆணைக்குழு ஒன்றின் முன்னால் குறித்த விடயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினாலும் நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையினாலும் சிரமதான பணிகளைநிறுத்துமாறு கோரினார்கள்.

இதனையடுத்து பௌத்த பிக்குகள் புல்டோஸருடன் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்!





அம்பாறை, செப். 04

ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளைக் கண்டித்து அட்டாளைச்சேனையில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டப் பொதுப் பணிகள் அமைப்பின் தலைவர் எஸ்.எல்.முனாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# வெள்ளியன்று புதுடில்லிக்கு பயணமாகிறார் இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர்!



கொழும்பு, செப். 04

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன எதிர்வரும் வெள்ளிக்கிழமை புது டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், திலக் மாரப்பன மேற்கொள்ளவுள்ள முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன், அண்மையில் வெளிவிவகாரச் செயலராகப் பதவியேற்ற பிரசாத் காரியவசமும், புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் சில அமைச்சர்களையும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்பதற்காக கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், ஜனாதிபதி மைத்திரி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சில நாள்களுக்கு முன்னரே சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சரின் புதுடில்லிப் பயணம் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயணம் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிடுகையில்-

இந்தியாவுடன் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு உறவுகள் நெருக்கமாக உள்ளன. எமது தலைவர்களுக்கு இடையில் மிகச் சிறந்த உறவுகள் இருக்கின்றன. இந்த நிலையில், அவர்கள் எல்லா விடயங்கள் குறித்தும் பேசுவார்கள்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்பவர்கள், முதலில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வது அண்மைக்கால வழக்கமாக மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா செல்கிறார் ஜனாதிபதி மைத்திரி!



கொழும்பு, செப். 04

ஐ.நா. பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் முக்கிய அம்சமான, உலகத் தலைவர்கள் பொதுத் தலைப்பின் கீழ் உரையாற்றும் அமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 17ஆம் திகதி நியூயோர்க்கிற்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

## பாதாள உலகக்குழு உறுப்பினர் வெட்டிக்கொலை!

பாணந்துறை கடற்கரையில் பத்தா என்று அழைக்கப்படும் இந்திக உதயகுமார என்ற பாதாள உலகக்குழு உறுப்பினர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபருக்கும் வேறு சிலருக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தா என்ற பாதாள உலகக் குழு உறுப்பினரின் சகாக்களுக்கும் வேறு சிலருக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்து வந்த தகராறின் பிரதிபலனாக இந்தக் கொலை நடந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

# மஹிந்த ராஜபக்ஷ தாய் வீட்டிற்கு வரும்போது வரவேற்கத் தயாராகவே இருக்கின்றோம்!

## பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டி கம தெரிவிக்கிறார்



கொழும்பு, செப். 04

மஹிந்த ராஜபக்ஷ தாய் வீட்டிற்கு வரும்போது வரவேற்கத் தயாராகவே இருக்கின்றோம் என்று பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

மைத்திரியையும் மஹிந்தவையும் வேறு வேறாகப் பார்க்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் 66ஆவது மாநாடு தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் காலியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பல குழப்பங்கள் காணப்படுகின்றன என கட்சியை அங்கும் இங்கும் இழுத்துச் செல்கின்றன எனவும் அண்மைக்காலங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. எவ்வாறாயினும் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் அனைவரும் ஒன்றுகூடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

66ஆவது ஆண்டு மட்டும் அல்ல 70ஆவது ஆண்டு நிறைவு மாநாடும் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் நிச்சயமாக நடைபெறும் என்பதை நான் உறுதியுடன் கூறுகின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வரலாற்றில் நோக்கும் போது நெருக்கடிகளைச் சந்தித்து வெற்றிபெற்றுள்ளமையை அவதானிக்க முடியும். சுதந்திரக்கட்சியுடன் சிறு கட்சிகள் கூட்டணியைக் கொண்டிருக்கின்றபோதும் சிறு குழுவொன்று சுதந்திரக் கட்சியைச் சிதைத்துக்கொண்டு செல்வதற்கு முயற்சிக்கின்றது.

அதேநேரம் அந்தக் குழுவினருக்கு தலைமைத்துவத்தினை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்குகின்றார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நீங்கள் தற்போதும் ஜனாதிபதி தான். உங்களுக்கு ஏற்கனவே இரண்டு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. நான் மூன்றாவது தடவையாகவும் அழைப்பு விடுகின்றேன்.

அதேநேரம் உங்களை நாங்கள் இவ்வளவு தூரம் ஏன் அழைக்கின்றோம் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தவறான ஓர் இடத்தில் இருக்கின்றீர்கள். நீங்கள் தாய் வீட்டுக்கு வருகை தரும் போது உரிய மரியாதைகளுடன் வரவேற்கத் தயாரகவே உள்ளோம்.

நீங்கள் வருவது எமது கட்சிக்குப் பெரும் பலமாகும். அடுத்த தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றி பெறுவதற்கு நீங்கள் எம்முடன் இருக்க வேண்டும்.

நீங்களும் (மஹிந்தவும்) மைத்திரியும் இரண்டு பக்கம் இருந்து விளையாட்டு வீட்டை அமைக்காது எங்களையும் நெருக்கடிக்குள்ளாக்காது சக்தி மிக்க அத்திவாரத்தினை சுதந்திரக்கட்சிக்கு இடுவதற்காக ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுகின்றேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு நாணயங்களை எடுத்துச் செல்ல முயன்றவர் கைது!

கொழும்பு, செப். 04

38லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்ல முயற்சித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக சிங்கப்பூர் நோக்கி இந்த வெளிநாட்டுநாணயங்களை எடுத்துச்செல்ல அவர் முயற்சித்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எமிரேட்ஸ் விமானத்தின் ஊடாக இந்த நபர் சிங்கப்பூர் செல்ல முயற்சித்துள்ளார்.

இந்த நபர் தொடர்பில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவரைச் சோதனையிட்ட போது பயணப் பொதியில் பெருமளவு வெளிநாட்டுப் பணம் மீட்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண்ட்ஸ், கட்டார் ரியால், குவைத் தினார் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பணத்தை அரசுடமையாக்க சுங்கப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த 44 வயதான இவ் சந்தேகநபர் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

# சைட்டம் தொடர்பில் ஆராய குழு நியமனம்!



கொழும்பு, செப். 04

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழுவொன்றை நியமித்துள்ளார்.

சைட்டம் தொடர்பில் ஆராய்ந்து 10 நாள்களுக்கு அறிக்கையொன்றை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு அந்தக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் பல்கலைக்கழக விவகாரம் அண்மைக் காலமாகவே பெரும் சிக்கலை அரசுக்கு ஏற்படுத்தி வருகிறது. இந்த மாலபே தனியார் கல்லூரிக்கெதிராக பல்கலைக்கழக மாணவர்கள் பல வருடங்களாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கையெடுப்பதாக அண்மையில் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். அந்தவகையில் தற்போது சைட்டம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை அவர் நியமித்துள்ளார்.

பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அந்தக் குழுவில் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாஸ, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டீ.சீ.திஸாநாயக்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மொஹான் டி.சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# கனக. மனோகரனின் நூல் நாளை யாழில் வெளியீடு

கனடாவில் வதியும் சட்டத்தரணி கனக. மனோகரன் எழுதிய 'ஈழத் தமிழர்கள் எமக்காக வாழ்ந்தவர்கள்' என்ற நூலின் வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் பெ.கனக சபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் யாழ். மாவட்ட சபைத் தலைவர் ஏ.என்.இராஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சு.சிறில் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றுவர்.

ஏற்புரையை நூலாசிரியர் கனக. மனோகரன் வழங்குவார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்களின் வாழ்வும் பங்களிப்பும் பற்றிய ஒரு விமர்சன மதிப்பீடாக இந்த நூல் மலர்ந்துள்ளது. தந்தை செல்வா, வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், இரும்பு மனிதன் இ.மு.வி.நாகநாதன், செ.இராஜதுரை, மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம், உடுவில் தர்மலிங்கம் உட்படப் பல முன்னாள் தலைவர்களின் பணிச்சிறப்பை இந் நூல் நயக்கிறது. (உ)

## தினசரி ராசி பலன் 04.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 19 ஆம் நாள் திரயோதசித்திதி பகல் 12.14 மணி வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: திருவோணம் பகல் 11.17 மணி வரை. பின்னர் அவிட்டம்: அமிர்த்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் - காலை 7.34 மணி முதல் 9.05 மணி வரை. சுபநேரம் - பகல் 12.05 மணி முதல் 1.34 மணி வரை. இன்று நடேசர் அபிஷேகம். இன்று திவசம் செய்ய வேண்டிய திதி - ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: இன்று இல்லை.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்**: சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். எண்ணிய காரியம் தடைப்படும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**ரிஷபம்** : யோகமான நாள். வெளிநாடு செல்லும் எண்ணம் சிலருக்கு நிறைவேறும். அசையாச் சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டாகும். சொந்த வீட்டில் குடிபோகும் வாய்ப்பு அமையும்.

**மிதுனம்** : குழப்பமான நாள். மனதில் யோசனை, கவலை அதிகரிக்கும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும்.

**கடகம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற வீண் செலவுகள் மனக்கஷ்டம் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும்.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் எல்லா வழிகளாலும் வந்துசேரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் விரும்பிய உயர்வுகள், மாற்றங்கள் கிடைக்கும்.

**கன்னி**: மகிழ்ச்சியான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வெளிநாட்டு உறவினர் வரவால் களிப்பும் கலகலப்பும் அதிகரிக்கும்.

**துலாம்** : சஞ்சலமான நாள். பணவரவு குறையும். தேகத்தில் ரோகங்கள் உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சுயதொழில் ஆதாயம் குறையும்.

**விருச்சிகம்**: மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவருவாய் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரித்தாலும் யாரையும் நம்பாமல் தன் வேலையைத் தானே செய்வது நன்று.

**தனுசு** : இன்பமான நாள். தனவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**மகரம்**: உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அரசாங்க உதவிகளால் பலர் நன்மை அடைவார்கள்.

**கும்பம்**: யோசனையான நாள். மனச்சஞ்சலம் கவலை அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.

**மீனம்** : சுபீட்சமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்புண்டு. சிலருக்கு விரும்பிய தொழில் வாய்ப்புக் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் கால்களில் உதயமானோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# தமிழ்க் கிராமத்தைத் தத்தெடுத்தார் ஜேர்மன் வாழ் யாழ். இளைஞன்!



அம்பாறை மாவட்டத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டில் 52 தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்ட இடமான திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தை ஜேர்மனியைச் சேர்ந்த இலங்கையர் ஒருவர் தத்தெடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த மகான் கோடீஸ்வரன் என்பவரே திராய்க்கேணி கிராமத்தை தத்தெடுத்துள்ளார்.

இவர் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஜேர்மனி யக்கிளையின் உறுப்பினராவார்.

மகான்கோடீஸ்வரன் மற்றும் ஜேர்மனியக் கிளைத்தலைவர் கிளாரன்ஸ் செல்லத்துரை ஆகியோர், அம்பாறை மாவட்ட சமூகசேவையாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் விடுத்த அழைப்பை ஏற்று கடந்தமாதம் திராய்க்கேணி கிராமத்திற்கு சென்று பார்வையிட்டிருந்தார்கள்.

அதன்பின் ஜேர்மன் சென்ற இவர்கள், திராய்க்கேணியை தாம் தத்தெடுப்பதாகவும், இதன் முதற்கட்டமாக 16 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்ற நிலையில், தற்போது 5 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

ஏனைய வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. அதன் திறப்பு நிகழ்வில் ஜேர்மனிலிருந்து மகான்கோடீஸ்வரன் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு தமிழக பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு






யாழ்ப்பாணம், செப். 04

சந்நிதியான் ஆச்சிரமத்தின் நிறுவுனரும், நிர்வாகியுமான செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகளின் ஆச்சிரமத்தினூடாக நடைமுறைப்படுத்தி வருகின்ற பன்முகப்பட்ட சமூக நலனோம்பு பணிகளைக் கௌரவித்து, தமிழ்நாட்டின் அரச பல்கலைக்கழகங்களில் ஒன்றான சென்ரல் பல்கலைக் கழகத்தினரால் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.



அதன்பொருட்டு, கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில், இந்தப் பட்டம் வழங்கியமைக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன், பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சென்ரல் பல்கலைக்கழகத்தினரால் வழங்கப்பட்ட பட்டத்தைச் சுவாமிகளிடம் கையளித்தனர்.



தொழிற்கல்வி அமைச்சின் பணிப்பாளர் கலாநிதி நா.யோகராஜன் தலைமையில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் இந்த நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தனர்.

தமிழ்நாடு சென்ரல் பல்கலைக்கழகத்தின் வேந்தர் கலாநிதி வி.கிருஷ்ணமூர்த்தி, துணைவேந்தர் பேராசிரியர் ஏ.பி.தாஸ் ஆகியோர் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதப் பட்டமளிப்பு விழாவில் சுவாமிகளுக்கான இந்தப் பட்டத்தை வழங்கியிருந்த போதிலும் இதனை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது. (அ)

''இதுவரை காலமும் 'ஆவா குறூப்' என அழைக்கப்பட்டு வந்த நமது நட்பு வட்டம் இனி, கார்ல்மார்க்ஸின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்ட - மார்க்ஸிய பின்னணி கொண்ட- இளைஞர் பங்களிப்புடன் 'ஜனநாயக, சிவில் உரிமைகளுக்கான மார்க்ஸிய இளைஞர் முன்னணி' எனும் அமைப்பாகச் செயற்பட ஆரம்பிக்கின்றது''- என அக் குழு அறிவித்திருக்கின்றது.

அதையொட்டி அதன் அமைப்பாளரான குமரேசரத்தினம் வினோதன் விளக்கமறியலில் இருந்தவாறு விடுத்தார் என தெரிவிக்கப்படும் அறிக்கை 'காலைக்கதிர்' நாளிதழுக்கு கிடைத்துள்ளது. அதன் ஒரு சுருக்கப்பகுதி நேற்றைய 'காலைக்கதிர்' இதழில் வெளிவந்திருந்தது.

அதன் முழுவிவரம் இங்கு பிரசுரமாகிறது.



# சமூக சிற்பிகளாக மாற விரும்பும் 'ஆவா' குழு

அண்மைய நாள்களில் ஊடகங்களில் சற்றுப் பரபரப்பாக பேசப்பட்ட 'ஆவாகுழு' எனப்பொலிஸாரினால் பெயரிடப்பட்டு இக் குழுவின் தலைவன் என்றும் 'ஆவா' என்றும் அவர்களாலேயே பெயரிடப்பட்டு, அடையாளப்படுத்தப்படும் குமரேசரத்தினம் வினோதன் ஆகிய நான், முப்படைகளின் தளபதியும், மூவின மக்களின் தலைவரும் என்ற வகையில் உங்களுக்கும் (ஜனாதிபதிக்கும்) இந்நாட்டு மக்களுக்கும், குறிப்பாக சிங்கள சகோதர இன மக்களுக்கும் சில உண்மைகளை வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

**'ஆவா' குழுவின் பெயர் வந்த விதம்**

யாழ்ப்பாணத்தில் பிறந்து, யுத்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு இன, மொழி, சாதி, மத ரீதியாகவும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்த சாதாரண கிராமத்து தமிழ் இளைஞன் நான். பாடசாலைக் காலங்களிலும், அதன் பின்னரான வாலிப பருவத்திலும் இளைஞர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொள்வதும், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதும் அவ்வயதிற்குரிய இயல்பாகும். பதின்ம வயதில் எந்த ஓர் இளைஞனும் சிறிய சண்டை ஒன்றையேனும் ஒரு முறையேனும் கடந்தே வந்திருப்பான். அவ்வாறான ஒரு சில சண்டை சச்சரவுகளினால் பொலிஸார் என்னைத் தேடி வரும்போது எனது பெயரான வினோதன் என்பதைக் குறிப்பிட்டு 'வினோதன் ஆவா' (வினோதன் வந்தாரா?) என விசாரிக்கும் போது சிங்கள மொழியறியாத எனது கிராமத்துத் தமிழ் மக்கள் வினோதனைப் பொலிஸார் 'ஆவா, ஆவா' என விசாரிக்கின்றனர் எனக்கூறிக்கூறி 'ஆவத' என்னும் சிங்களச் சொல் மருவி 'வினோதன் ஆவா' எனப் பரவலாகப் பேசப்பட்டு கடைசியில் சாதாரண கிராமத்து இளைஞனான என்னைப் பொலிஸாரே 'ஆவா' குழுவின் தலைவனாக்கிவிட்டார்கள்.

மனிதர்கள் மொழியைப் பயன்படுத்தி பயன்கொள்ளும் விதம் மிக முக்கியமானது. மொழியின் பயன்பாடு சிந்தனைத் தளத்தில் கொண்டு சேர்க்கும் மாற்றங்களும் நாம் எவரும் அறியாதவையும் அல்ல. தமிழ் மட்டுமே பேசும் மக்களும், சிங்களம் மட்டுமே பேசும் மக்களும் மொழி ரீதியாக எவ்வாறு பிளவுபட்டிருக்கி றார்கள் என்பதற்கும், இரு தரப்பும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் இனங்களுக்கிடை யிலான நல்லிணக்கத்திற்கும் இந்த மொழிப் பிரச்சினை எவ்வளவு தடை யாக அமைந்துள்ளது என்பதற்கும் இந்த 'ஆவா' பிரச்சினையே ஒரு சிறந்த சான்றாகும்.

'ஆவத' என்னும் ஒரு சிறிய சிங்களச் சொல் யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்து தற்பொழுது 24 வயதுடைய இளைஞனான எனது வாலிபக் கனவுகளைக் கொடூரமாக நசுக்கி எனது வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றி விட்டது.

**சோடிக்கப்பட்ட வெடிகுண்டு வழக்கு**

ஒரு வாழைக்குட்டி கூட இல்லாத எனது வீட்டில் பொலிஸாரின் கண்களுக்கு மட்டுமே தென்பட்ட வாழைத் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டதாக கூறப்படும் கைக்குண்டொன்றை போட்டு குண்டு வழக்கொன்றை சோடித்து என்னை சிறையிலடைத்ததை இந்நாட்டில் இயங்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எவரேனும் அறிவீர்களா? என்னை மட்டுமல்லாது எனது நண்பர்கள், எனக்குத் தெரிந்தவர்கள், எனப் பலர் மீதும் பாராபட்சம் இல்லாமல் மிகத் தாராளமாகவே பொலிஸார் குண்டு வழக்குகளை சோடித்துப் போட்டிருக்கின்றனர். இன்னமும் போட்டுக் கொண்டேயுமிருக்கின்றனர். என்னுடன் தொலைபேசியில் பேசியமைக் காக, என்னைச் சைக்கிளில் ஏற்றிச் சென்றமைக்காக, என்னுடன் சேர்ந்து புகைப்படமெடுத்தமைக்காக, ஏன் எனக்கு சாப்பாட்டுப் பார்சல் வாங்கித் தந்ததாக குற்றம் சாட்டப்பட்டும் கூட 20 வயது இளைஞர் ஒருவர் இப்போது சிறையிலிருக்கிறார்.

**நண்பர்களினால் நிரம்பிய சிறை**

சராசரி இளைஞன் ஒருவன் கொண்டிருக்கும் நட்பு வட்டத்தை விட பத்து மடங்கு பெரிய நட்பு வட்டத்தை இயல்பாகவே கொண்டிருந்த காரணத்தால் ஒரு கட்டத்தில் யாழ்ப்பாண சிறைச்சாலையே எனது நண்பர்களால் நிரம்பி வழிந்திருக்கிறது என்றால் அது மிகையில்லை.

தென்னிலங்கை சிங்கள சகோதர இன மக்களே! கௌரவ ஜனாதிபதி அவர்களே! இந்த நாட்டில் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராடத் தூண்டியது அரசியல் காரணங்களாகவிருந்தாலும், தமிழ் இளைஞர்கள் பெருமளவில் ஆயுதக்குழுக்களில் விரும்பி இணைந்த மைக்கான முக்கிய காரணமாகவிருந்தது அரச ஆயுத படைகளின் அட்டூழியங்களும், அடக்குமுறைகளும், அதிகார துஷ்பிரயோகங்களும் சித்திரவதைகளுமே.


**கிரிமினல்கள் போன்று செயற்படும் பொலிஸ்**

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழர் பிரதேசங்களில் பொலிஸார் தவிர்ந்த ஏனைய படையினருக்கு சாதாரண சிவில் மக்களுடனான தொடர்பு பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கும் நிலையில் சிவில் சமூகத்தைப் பாதுகாக்கவும், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும், நேர்மையாகவும், நீதியாகவும் செயலாற்ற வேண்டிய பொலிஸார் காட்டுமிராண்டிகள் போன்றும் கிரிமினங்கள் போன்றும் செயலாற்றுகின்றமையை நீங்கள் அறிவீர்களா?

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இருவரை வெட்டினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு இது வரைக்கும் கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞர்கள் அனைவரும் மிக மிக மோசமாக, மிருகத்தனமாக தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேற்படி குற்றத்தின் சந்தேகநபர்களாக பொலிஸார் கருதிய இளைஞர்களின் வீடுகளுக்கு தமது அடையாளங்களை மறைத்து முகங்களை மூடிக்கட்டிக் கொண்டு திடீரென நுழைந்திருக்கின்றனர். சட்டரீதியான முறையான கைதுகள் அல்ல. திடீரென இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்ட இடங்களில் இருந்து வாகனங்களில் ஏற்றப்பட்ட நிமிடம் முதல் வாகனங்களில் வைத்தே மிருகத்தனமாக தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

**பொலிஸ் சித்திரவதை**

பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது வேறு இரகசிய இடங்களுக்கோ கொண்டு செல்லப்பட்ட இவர்கள் கண்கள் கட்டப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, குந்தி இருக்கும் நிலையில் வைத்து கைகள் இரண்டையும் கணுக்கால்களுடன் இணைத்து கைவிலங்கு பூட்டப்பட்ட நிலையில் முழங்கால்களுக்கிடையில் உலோகப் பைப் ஒன்று செருகப்பட்டு, கயிற்றினால் கட்டிமேலே தலைகீழாக அந்தரத்தில் தொங்கவிடப்பட்டு Parrot's Perch என நாம் கேள்விப்பட்ட தொன்மையான சித்திரவதை முறையூடாக சித்திரவதைக் குட்படுத்தப்பட்டிருக்கின்றனர். தலை கீழாகக் தொங்குவதாலும், தொடர்ச்சியாக குதிக்காலில் அடித்துக் கொண்டிருப்பதனூடாக இரத்தம் முழுவதும் தலைப் பக்கம் வந்து முதுகுத் தண்டின் ஒவ்வொரு கணுவிலும் விவரிக்க முடியாத வலி பரவும், இந்த வேதனையை விவரிப்பது பெருங்கடலில் ஒரு துளியாகும். இதை நிகழ்த்திய பொலிஸ்காரர்களுக்கு இது ஒரு கொண்டாட்டமாக இருந்திருக்கிறது. தொடர்ச்சியாக இவர்கள் மது அருந்திக் கொண்டே இருந்திருக்கிறார்கள். கையைத் தூக்க முடியாது விடின் ஒரு விரலையும் தூக்க வேண்டும், வார்த்தைகளை வாயிலிருந்து விடு



விக்க வேண்டும், யாருடைய பெயர்களையாவது கூற வேண்டும் அதுவரை சித்திரவதை தொடர்ந்திருக்கிறது.

ஒரு சிலரைத் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் வரை தூங்கவே விடாமல் சித்திரவதை செய்திருக்கிறார்கள். பைத்தியம் பிடித்த ஒரு தாய் தன் குழந்தையை எடுத்து அதன் கால்களைப் பிடித்து உயரே தூக்கித் தரையில் அடித்து அதன் கபாலத்தைச் சிதற அடிப்பதற்கு ஒத்தது இந்த சித்திரவதை. இவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைப் பற்றி நீதிமன்றத்தில் பேச அனுமதிக்கப்படவில்லை. பேச விடாமல் இருக்க இவ்விளைஞர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். சிலர் கைகளில் குண்டுகள் கொடுக்கப்பட்டு கைவிரல் அடையாளங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. ஏதாவது நீதிமன்றில் பேசினால் குண்டு வழக்கு போடப்படும் என அச்சுறுத்தப்பட்டிருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)





# ‘‘ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?’’ 280

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

வெள்ளையின அமெரிக்காவின் தீய கொடூரங்களை ‘‘சாதகமாக்கிக் கொள்வதற்கான ட்ரம்பின் முயற்சிகள் முன்னொருபோதும் இல்லாத அத்துமீறல்கள்’’ என்று பிரான்ஸின் Le Monde பழி சுமத்தியது. இருந்தபோதினும், அது ஐரோப்பிய ஆளும் வர்க்கத்தின் மிகப்பெரும் கவலைகளை நேரடியாகச் சுட்டிக் காட்டியது. எப்போதும் போல முன்னுக்குப்பின் முரணாகவும் மற்றும் முன்கணிக்கவியலாமலும் உள்ள அமெரிக்க ஜனாதிபதியின் பிற்போக்குத்தனம், அவர் அரசியல் எதிர்ப்பாளர்களின் முகாமையும் கடந்து, அவருக்கு எதிராக ஒரு கடும் சீற்றத்தின் அலையை ஐக்கியப்படுத்தும் அபாயத்தை முன்னிறுத்துகிறது.

**உண்மையில் 2008 பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கை என்னவாக இருந்துள்ளது?**

ஆனால், நவ-நாஜி இயக்கத்தின் ‘‘மிக அருமையானவர்களுக்கு’’ ட்ரம்ப் அனுதாபத்தைக் காட்டுகையில், அவர் செய்யும் கணக்கீடுகளை ஐரோப்பாவில் இருந்து புரிந்து கொள்வது ஒன்றும் மிகச் சிரமம் இல்லை. ஈராக்கில் இருந்து ஆப்கானிஸ்தான் வரையில் மக்கள் மதிப்பிழந்த ஒரு கால் நூற்றாண்டு ஏகாதிபத்திய போர்கள், அதிகரித்துவரும் சமூக சமத்துவமின்மை மற்றும் ஐரோப்பாவை போலவே அமெரிக்காவிலும் தொழிலாளர் வர்க்கம் மீதான இடைவிடாத சமூக தாக்குதல்களுக்குப் பின்னர், முதலாளித்துவ அரசியலை உத்தியோகபூர்வ ஜனநாயக அலங்காரங்களில் அலங்கரிப்பது இனியும் அதிக சாத்தியமில்லாது உள்ளது. அரசியல் உயரடுக்கிடம் இருந்து அந்நியப்படலும் கோபமும் தயவுதாட்சண்யமின்றி அதிகரித்து வருகின்ற நிலையில், ஆளும் வர்க்கம் அதன் ஆட்சிக்கு வேறோர் அடித்தளத்தை அமைக்க முயன்று வருகிறது.




உண்மையில் 2008 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கை என்னவாக இருந்துள்ளது? 2011 இல் நாசகரமான ஐரோப்பிய ஒன்றிய சிக்கன கொள்கைகளுக்கு எதிராக கிரீஸில் கோபம் அதிகரித்த போது, ஐரோப்பிய ஒன்றியம் கிரேக்கப் பிரதமர் ஜோர்ஜ் பாப்பன் திரேயோவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, பழமைவாதிகள் மற்றும் பாப்பன் திரேயோவின் சமூக ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து அதிவலது Popular Orthodox இயக்க கூட்டணியின் அடிப்படையில் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு தொழில் நிபுணர்களின் அரசாங்கத்தை நிறுவியது. மேலும் இப்போது கண்டம் எங்கிலும் உள்ள, தங்களை அதிவலதிற்கு விரோதமாக காட்டிக்கொள்ளும் சக்திகள், அவர்களின் தேசியவாத நிலைப்பாடுகளை சட்டபூர்வ விவாதத்திற்குரிய கூறுபாடுகள் என்று வாதிடுகின்றன.

குட்டி-முதலாளித்துவ ‘‘இடதின்’’ அன்புக்குரியதும், சிக்கன திட்டங்களுக்கு சார்புடையதுமான சிரிசா கட்சி (தீவிர இடதின் கூட்டணி), கிரீஸில் பதவியேற்ற போது, அது அதிவலது சுதந்திர கிரேக்கர்களுடன் ஒரு கூட்டணி அரசு அமைத்தது. ட்ரம்பின் மற்றும் இனவெறியின் ஓர் எதிர்ப்பாளராக இன்று பாசாங்குத்தனமாக தன்னை காட்டிக்கொள்ளும் மக்ரோன், அவரது தேர்தல் வெற்றி உரையில், பிரான்ஸின் நாஜி-ஒத்துழைப்புவாத விச்சி ஆட்சியின் அரசியல் வழித்தோன்றலான தேசிய முன்னணி வேட்பாளர் மரீன் லு பென்னுக்கு ஒரு ‘‘குடியரசு வணக்கம்’’ செலுத்திய பின்னர் தான் அவரது ஜனாதிபதி பதவி காலத்தைத் தொடங்கினார்.

இறுதியாக, இனவாதத்தைக் கண்டிக்கும் மற்றும் ட்ரம்புடன் ஒரு மோதலுக்கு கோரிக்கைகள் விடுக்கும் சூல்ஸ், மேர்க்கெலின் பரந்த தலைமையைக் கடந்து வர ஜேர்மன் தேர்தல்களில் இனவாதத்திற்கு முறையீடுகள் செய்ய முயன்று வருகிறார்-லைப்சிக்கில் வாழ்ந்து வரும் புலம்பெயர்ந்தவர்கள், இந்த நாட்டில் யார் திட்டநிரலை வகுக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அவர்கள் முகத்தில் நல்ல ஓர் அறை’’ கொடுக்க வேண்டுமென அவர் நினைப்பதாக அறிவித்தார். ட்ரம்ப்பை நோக்கிய சூல்ஸின் மனோபாவம் என்னவாக இருந்தாலும், இதுபோன்ற பிற்போக்குத்தனமான அழுக்குகள் ஜேர்மனியிலும் மற்றும் ஐரோப்பா எங்கிலும் அதிவலது அரசியலை மட்டுமே பலப்படுத்தும்.

சார்லட்வில் குறித்த ட்ரம்ப் கருத்துக்களில் வெளிப்பட்ட பாசிசவாத அபாயம், அமெரிக்க எல்லைகளுக்கும் அப்பாற்பட்டு நீள்கிறது. அதன் வேர்கள் ட்ரம்பின் தனிப்பட்ட குணநலன்களிலோ அல்லது ‘‘வெள்ளையின அமெரிக்காவின்’’ பாவங்களிலோ கிடையாது, மாறாக ஒட்டுமொத்த முதலாளித்துவ அமைப்பு முறையின் உலகளாவிய சீரழிவிலேயே வேரூன்றியுள்ளது. கடந்த நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்ததைப் போலவே, பாசிசவாதத்திற்கு எதிராகவும், சர்வாதிகாரம் மற்றும் போர் அபாயத்திற்கு எதிராகவும் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகரமான சர்வதேச இயக்கத்தை அபிவிருத்தி செய்வதே முன்செல்வதற்கான ஒரே பாதையாகும்.

**வெள்ளை மாளிகையும், சார்லட்வில்லில் பாசிசவாத அட்டூழியமும்**

பொலிஸ் உடனான பல மாதகால ஆழ்ந்த திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்புக்குப் பின்னர், வேர்ஜினி




யாவின் சார்லட்வில்லில் நாஜி ‘‘வலதை ஐக்கியப்படுத்துவோம்’’ (Unite the Right) அட்டூழியம், அண்மையில் மதியம் அதன் மரணகதியிலான உச்சத்தை எட்டியது, அப்போது ஓஹியோவைச் சேர்ந்த 20 வயதுடைய ஹிட்லர் ஆர்வலர் ஒருவர் எதிர் - ஆர்ப்பாட்டக்காரர்களது ஒரு கூட்டத்திற்குள் அவர் காரை செலுத்தியதில், சாண்டர்ஸின் பேர்ணி ஆதரவாளரான 32 வயதுடைய ஹீத்தர் ஹெயர் கொல்லப்பட்டு, 14 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இந்த அதிவலதின் வன்முறையை ட்ரம்ப் வார்த்தையளவில் கூட கண்டிக்கத் தவறியதன் மீது பெருநிறுவன ஊடகங்கள் ஒருங்குவிந்துள்ளன. ஆனால், ட்ரம்பின் கருத்துக்கள் குறித்து அமெரிக்க ஊடகங்கள் கையைப் பிசைந்து கொண்டிருப்பது சிறுபிள்ளைத் தனமானது மட்டுமல்ல. அவை, சார்லட்வில்லில் நாஜி அணிதிரட்டலை ஊக்குவிப்பதிலும், தூண்டிவிடுவதிலும் மற்றும் திட்டமிடுவதிலும் கூட வெள்ளை மாளிகை எந்தளவிற்கு சம்பந்தப்பட்டிருந்தது என்பதை வேண்டுமென்றே மூடிமறைக்கின்றன. வெள்ளை மாளிகை, பாசிசவாத செயற்பாட்டாளர்களுடன் சேர்ந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. அவரும் மற்றும் அவர் நண்பர் ஸ்டீவ் பானனும், யாரை தங்களின் ஒரு முக்கிய அரசியல் செல்வாக்கு வட்டாரமாகப் பார்க்கிறார்களோ அவர்களது நடவடிக்கைகளை ட்ரம்ப் ஏன் கண்டிப்பார்?

இந்த நாஜி வன்செயல், அமெரிக்க அரசியலில் ஒரு சித்தப்பிறழ்ச்சி சம்பவமல்ல. இது, இரு கட்சி அமைப்புகளுக்கு வெளியே அரசியலமைப்பை - மீறி பாசிசவாத இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான டொனால்ட் ட்ரம்ப் மூலோபாயத்தின் விளைவாகும், மலைப்பூட்டும் சமூக சமத்துவமின்மை மட்டங்களின் சுமையின் கீழ், அக்கட்சிகளுமே கூட அமெரிக்க ஜனநாயகத்தின் துர்நாற்றம் மற்றும் பொறிவின் வெளிப்பாடாக உள்ளன.

கடந்த வாரங்களுக்கு முன்பு, ட்ரம்ப் மற்றும் அவர் ஆலோசகர்களும்-ஸ்டீபன் பானன், ஸ்டீபன் மில்லர் மற்றும் செபஸ்தியன் கோர்க்காவும் - அவரது அரசியல் அடித்தளத்தின் மையமான பாசிசவாதக் கூறுபாடுகளிடையே ஆதரவை அதிகரிக்கும் அந்த நிர்வாகத்தின் முயற்சிகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

ட்ரம்ப், அவரது கட்சியின் மிகவும் சக்தி வாய்ந்த சட்டமன்ற பிரமுகர்களில் ஒருவரான குடியரசு கட்சியின் செனட் பெரும்பான்மை தலைவர் மிட்ச் மெக்கொன்னல் இற்கு சவால்விடுத்து, அவரைத் தாக்கினார். அமெரிக்கா வடகொரியாவுக்கு எதிராகப் போரை ‘‘தேர்ந்தெடுத்து, தீர்மானித்துள்ளது’’ என்று போர்வெறி அச்சுறுத்தல்களை விடுத்த அவர், அவரது புலம்பெயர்வோர் - விரோதக் கொள்கைகளை மற்றும் ‘‘குற்றங்கள் மீதான கடுமைத் தன்மையை’’ ஆதரிக்குமாறு, அவரது பில்லியனிய அதிகார வட்டாரங்களிடமும் அத்துடன் பொலிஸ், புலம்பெயர்வு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்திடமும் முறையிட்டார்.

**அமெரிக்கா வடகொரியாவுக்கு எதிராகப் போரை ‘‘தேர்ந்தெடுத்து, தீர்மானித்துள்ளது’’ என்று போர்வெறி அச்சுறுத்தல்களை விடுத்த அவர், அவரது புலம்பெயர்வோர் - விரோத கொள்கைகளை மற்றும் ‘‘குற்றங்கள் மீதான கடுமைத்தன்மையை’’ ஆதரிக்குமாறு, அவரது பில்லியனிய அதிகார வட்டாரங்களிடமும் அத்துடன் பொலிஸ், புலம்பெயர்வு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்திடமும் முறையிட்டார்.**

இந்த நிகழ்முறையில், 22 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட வேர்ஜினிய பல்கலைக்கழகத்தின் மீது கட்டுப்பாட்டை எடுத்த சக்திகளுக்கு அண்மையில் அவர் துணிவளித்துள்ளார். சுதந்திர பிரகடனத்தை எழுதிய தோமஸ் ஜெபர்சனால் வடிவமைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் நாஜிக்கள் ஒரு தீபச்சுடர் அணிவகுப்பை நடத்தியதோடு, இரத்தமும் மண்ணும், (நாஜிக்களின் வீர வணக்கம்) ‘‘சீக் ஹீல்’’, ‘‘ஒரே மக்கள், ஒரே தேசம், புலம்பெயர்வை நிறுத்து’’, என்று கோஷமிட்டனர்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

85




## அத்தியாயம் - VI

## பேச்சுக்கு அழைப்பு

அரசுத் தலைவர் பிரேமதாச 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி தலதா மாளிகையில் இருந்து நாட்டுக்கு விடுத்த செய்தியில், பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பி. இற்கும் அழைப்பு விடுத்தார். இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு இன்றி அது தீர்க்கப்பட வேண்டியது என்றும் கூறியது இந்தியாவின் முகத்தில் அறைந்தது போல அமைந்தது. சிறிலங்காவின் ஓர் அங்குலத்தையும் அந்நியருக்கு விட்டுக்கொடுக்கமாட்டார் என்றும் அவர் சபதம் உரைத்தார். விடுதலைப் புலித்தலைமையைப் பொறுத்தவரை, செய்தி தெளிவாக இருந்தது, புதிய அரசுத் தலைவர் இந்தியாவை



எதிர்க்கும் கொள்கையோடு நின்றார். விடுதலைப் புலிகள் அப்போது இருந்த நிலையில், பிரேமதாசவின் நிலைப்பாட்டைப் பற்றிக் கருத்தில் எடுப்பது நல்லது எனப்பட்டது. அந்தத் தருணத்தில், லண்டனில் இருந்த பாலா, பிரபாகரனுடன் தொலைத்தொடர்பு பேணி வந்தார். பிரேமதாச ஆட்சியினருடன் பேச்சு நடத்துவதற்கு பாலா ஆதரவாக இருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். புதிய அரசுத் தலைவருடன் விடுதலைப் புலிகள் கூட்டுச் சேர்ந்து, அமைதிப் படையைத் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றக் கூடுமாக இருந்தால், அது குறிப்பிடத்தக்க சாதனையாக இருக்கும் என்று பாலா என்னிடம் குறிப்பிட்டார். பதில் கொடுக்கும் முன் கொழும்பில் வேறு என்ன வளர்ச்சிகள் ஏற்படுகின்றன என்று அவதானித்தோம். அவசரகால நிலையை பிரேமதாச அகற்றினார். நல்லிணக்க சமிக்ஞையாக 1800 முழுநிலை ஜே.வி.பி. போராளிகளை விடுதலை செய்தார். இதனால், ஜே.வி.பியினரும் தமது பயங்கர நடவடிக்கைகளை இரண்டு மாதம் கைவிட்டார்கள். ஆனால், விடுதலையான இளைஞர்களையும் சேர்த்து, தங்கள் அணிகளுக்குப் புத்துயிர் அளித்து, முழு மூச்சுடன் திரும்பவும் தம் கிளர்ச்சிப் போராட்டத்தைப் பிரேமதாச ஆட்சிக்கு எதிராகத் தொடங்கினர். ஜே.வி.பி. மட்டில் தமது நல்லெண்ண முயற்சி வெற்றியளிக்காது என்பதை பிரேமதாச உணர்ந்தார். இராணுவ ரீதியாக அவர்களை ஒடுக்குவதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. தமது ஆட்சிக்குப் பெருஞ்சவாலாக அமைந்துவிட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தெற்கில் அடக்குவதானால் அதற்கு முன், இந்திய அமைதிப் படையை வெளியேறச் செய்யவேண்டும் என்று உணர்ந்தார். இதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவு அவருக்குத் தேவையாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் மன உறுதி, அர்ப்பணிப்பு, துணிச்சல், தியாகம் ஆகியவற்றுக்காக பிரேமதாச அவர்களை மதித்தார். இதை அவருடன் உரையாடும் போது நேரிலேயே கேட்டறிந்தேன். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைத் தூண்டியது சிங்கள அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளே என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். காரிய சாத்தியமான பேச்சு ஒன்றிலே ஈடுபட்டு, கலந்துரையாடல், சமரசம், கருத்து ஒருமைப்பாடு ஆகியவற்றின் வழியாக முரண்பாட்டைத் தம்மால் தீர்க்க முடியும் என்றும் பிரேமதாச நம்பினார். பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளோடு தொடர்புகொள்ள அவர் பெரும் பிரயத்தனம் செய்தார். அதை எப்படிச் செய்வது என்று அவர், ஈரோஸ் தலைவர்களான பாலகுமாரிடமும், பரராஜசிங்கத்திடமும் உசாவியபோது, அவர்கள் பாலா லண்டனில் இருக்கிறார் என்றும், இலங்கைக்கு வெளியே வாழும் ஒரேயொரு மூத்த விடுதலைப் புலித் தலைவர் பாலாவே என்றும், வன்னியில் உள்ள தலைமையுடன் பாலா இன்னமும் தொடர்பு வைத்திருக்கிறார் என்றும் அவர்கள் பிரேமதாசவிடம் தெரிவித்திருக்கிறார்கள். எப்படியோ, எமது தொலைபேசி எண்ணை பிரேமதாச பெற்று பாலாவுடன் கிரமமாகத் தொடர்பு கொண்டு நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார். அமைதிப் பேச்சுக்கான பிரேமதாசவின் அழைப்பை வன்னியில் உள்ள தலைமை கருத்தில் எடுத்திருப்பதாகவும், உரிய வேளையில் பொருத்தமான ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் பிரேமதாசவிடம் பாலா கூறினார். அதேசமயம், தமிழர் தாயகத்தில் இருந்து இந்தியப் படைகளை வெளியேற்றுவது தமது எண்ணம் என்பதை பிரேமதாச பகிரங்கமாக அறிவித்தால் அது பயன் தரும் என்றும் பாலா தெரிவித்தார். அதன் பின்னர், பிரேமதாசவின் அடுத்த செயற்பாட்டுக்காக விடுதலைப் புலிகள் காத்திருந்தார்கள். தமிழ் சிங்களப் புத்தாண்டு விழாக் கொண்டாட்டங்களையொட்டி, சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒரு பக்கப் போர்நிறுத்தத்தை 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அறிவித்த பிரேமதாச, அமைதியைக் கடைப்பிடிக்குமாறு இந்திய அமைதிப் படையையும் கேட்டுக்கொண்டார். பிரேமதாசவின் பகிரங்க அறிவித்தலுக்குப் பதிலாக, விடுதலைப் புலிகள் அரசுத் தலைவருக்கென வெளியிட்ட காரமான பகிரங்கக் கடிதம் ஒன்றிலே, ''ஒடுக்குமுறையில் ஈடுபட்டிருக்கும் இந்திய இராணுவம் எமது மண்ணைவிட்டு அகலும் வரை, போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை'' – என்று கூறி சிறிலங்கா அரசுத் தலைவரின் போர்நிறுத்த அழைப்பையும் நிராகரித்தார்கள். இந்திய இராணுவம் திருப்பி அழைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்வார் என்று தேர்தல் வாக்குறுதியாக வழங்கியதை பிரேமதாச கைவிட்டு விட்டதற்காக அவரை மிகக் காரமாகவும் புலிகள் தங்கள் பகிரங்கக் கடிதத்தில் கண்டித்திருந்தார்கள். அதன் உட்கருத்தையும் புலிகளின் கடுப்பையும் பிரேமதாச புரிந்து கொண்டார். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திக் கொண்டிருந்த தற்காப்புப் போராட்டம் மட்டில், பிரேமதாசவின் தேசியப் பற்றும், இந்திய எதிர்ப்பு உணர்வும் அனுதாபமும் உடையவையாக இருந்தன. விடுதலைப் புலிகளைச் சாந்தப்படுத்தவும் தமது நிர்வாகத்தில் அவர்கள் நம்பிக்கை வைக்கச் செய்ய வேண்டுமென்றால், இந்தியப் படை வெளியேற்றம் பற்றித் தாம் ஒரு பகிரங்க அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். இதற்கு அமைவாக 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி கொழும்பு புறநகர்ப் பகுதி பௌத்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, இந்திய அமைதிப் படைகளை மூன்று மாதத்துக்குள் இந்திய அரசு முற்றாகத் திருப்பி அழைத்துவிட வேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்தல் கொடுத்தார். அதேநாளில், சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன அமைதிப் பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்தார். சம்பவத் திருப்பங்களால் திருப்தியடைந்த விடுதலைப் புலித் தலைமை, லண்டனில் உள்ள தனது தலைமைப் பணிமனையில் இருந்து சிறிலங்கா அரசுத் தலைவருக்குக் கடிதம் ஒன்று அனுப்பியது. பேச்சுக்கான அழைப்பை தாம் ஏற்பதாகவும், அது நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. அந்தக் கடிதத்தை உடனடுத்து, அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகவும் முக்கிய பேச்சாளராகவும் பாலாவை விடுதலைப் புலிகளின் தலைமை நியமித்தது. இந்தச் சம்பவங்களை அடுத்து, அமைதி முயற்சிக்காக சிறிலங்காவுக்குப் பயணம் புரிவதற்கான ஏற்பாடுகளில் பாலாவும் நானும் ஈடுபட்டோம்.

நாம் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி கொழும்பு சென்றடைந்தோம். கொழும்பு ஹில்டன் உல்லாசப் பயணிகள் விடுதியில் நாம் தங்க வைக்கப்பட்டோம். அன்று மாலை அரச அணி ஒன்று மரியாதைச் சந்திப்புக்காக வந்தது. அதில் அரசுத் தலைவரின் செயலர் கே.எச்.விஜயதாச, பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சேப்பால ஆட்டிகல, வெளியுறவு அமைச்சின் மூத்த அதிகாரி பீலிக்ஸ் டயஸ் அபேசிங்க ஆகியோர் இருந்தனர். அந்தச் சிறிய சந்திப்பில், பேச்சுக்குப் புலிகள் சம்மதித்தமையை ஒட்டி அரசுத் தலைவர் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றார் என விஜயதாச கூறினார். ஏனைய போராளிகள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டபின், அரசுத் தலைவர் புலிகளின் அணியைச் சந்திப்பார் என்றும் கூறப்பட்டது. மறுநாள், சேப்பால ஆட்டிக்கலவும், தளபதி ரணதுங்கவும் விடுதிக்கு வந்தார்கள். வடபகுதிக் காடுகளிலிருந்து புலிப் பிரதிநிதிகளைக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளையும், எப்போது பேச்சு நடத்துவது என்பது பற்றிய விவரங்களையும் ஆராய்ந்தோம். வன்னிப் பயணம் தொடர்பாகப் பரப்புரை நடத்தவும், தேர்ந்தெடுத்த ஊடகவியலாளர்களை உலங்குவானூர்தியில் ஏற்றிச் செல்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பயணம் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி நடைபெறும் என்றும் முடிவாகியது.

(தொடரும்...)

# சமூக சிற்பிகளாக மாற விரும்பும் 'ஆவா' குழு

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
இவ்விளைஞர்களைக் கைது செய்யச் செல்லும் போது பொலிஸார் பெரும்பாலானவர்கள் மது போதையில் இருந்திருக்கிறார்கள்.

**அருவருக்கத்தக்க வகையில் பெண்களைத் தூஷித்தனர்**

ஒரு சில இளைஞர்களின் வீட்டு உறுப்பினர்களையும் பொலிஸார் தாக்கி இருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட ஓர் இளைஞனைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்ற அந்த இளைஞனின் தந்தையைத் தாக்கி அவர் சென்ற மோட்டார் சைக்கிளையும் அவரிடம் இருந்து பறித்துக் கொண்டு மகனைக் காண்பிக்காமல் விரட்டி அடித்துள்ளனர். தந்தை பொலிஸ் நிலையம் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை வழக்கில் இணைத்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்விளைஞர்களின் வீட்டுப் பெண்களை தூஷண வார்த்தைகளால் ஆபாசமாக, அருவருக்குத் தக்க விதத்தில் தூஷித்துள்ளனர்.

**புலிச்சாயம்**

இதில் இன்னொரு முக்கிய விடயம்கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் 18 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கின்றனர். என ஊடாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால், இவர்களில் பலரை விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என பொலிஸ் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடையும் போது இவர்களுக்கு 10 - 12 வயதாகவே இருந்திருக்கும். அவ்வாறாயின் இவர்கள் 6 - 7 வயதில் புலிகளுடன் இணைந்திருக்க வேண்டும். இவ்வாறான கட்டுக்கதைகள் மூலம் பொலிஸ் திணைக்களம் முழு நாட்டு மக்களையுமா முட்டாளாக்க முயற்சி செய்கிறது? இவ்விளைஞர்களை விடுதலைப் புலிகளுடன் கோத்து விடுவதன் மூலம் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களையும் பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச் சட்டப்பிரிவுகள்மூலம் ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே இதை நாம் காண்கின்றோம்.

ஜனாதிபதி அவர்களே! மேலே நாம் குறிப்பிட்ட சித்திரவதைகளையும், தாக்குதல்களையும் இவ்விளைஞர்கள்மீது நிகழ்த்திய பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கியது யார்? இது தமிழ் இளைஞர்களுக்கு மட்டு மல்ல. நாடு பூராவுமே பொலிஸார் இவ்வாறு தான் நடந்து கொள்கின்றனர்.

**சம்பந்தன் கூறியவை**

அண்மையில் முன்னாள் நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்கவின் இராஜினாமாவின் போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட வாசகம் ஒன்றை உங்களுக்கு இங்கே விசேடமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

''ஒருவர் தகுதி வாய்ந்த நீதிமன்று ஒன்றின் மூலமாகக் குற்றவாளியாகக் காணும்வரை அவர் நிரபராதியாக இருப்பது அவரது அடிப்படை உரிமையாகும்'' - என அவர் தெரிவித்திருந்தார். அவ்வாறாயின் இன்னமும் குற்றம் நிரூபிக்கப்படாமல் குற்றம் சாட்டப்பட்டவர்களாகவும், வெறும் சந்தேக நபர்களாகவும் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களுக்கு பொலிஸார் இவ்வாறான கொடூரமான, கொடிய தண்டனைகள் வழங்கியது ஏன்? சட்டம் என்பது இங்கே சராசரி மனிதனுக்கும் அதிகாரத்தில் இருப்பவனுக்கும் வேறு வேறான தாகவோ இருக்கிறது என நாம் உங் களிடம் கேட்க விரும்புகிறோம்.

**பொலிஸ் அராஜகம்**

இன்று தமிழர் பிரதேசங்களில் கட்டுக்கடங்காமல் தலைவிரித்தாடும் பொலிஸாரின் இலஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம், கைது செய்யப்படுபவர்கள் மீதான சித்திரவதை, மிருகத்தமான தாக்குதல்கள், மதுபோதையில் கடமையாற்றுதல், பொலிஸ் நிலையங்களுக்கு வரும் பெண்கள் மீதான சீண்டல்கள் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரல், போதைப் பொருள் வியாபாரிகளுடனான நெருக்கமான உறவுகள், நேரடியாகப் போதைப்பொருள் வார்த்தகங்களில் ஈடுபடுகின்றமை, ஒத்தாசை செய்கின்றமை என இவ்வாறு மிக நீளத்திற்கு அடுக்கிக் கொண்டே போகலாம்.

**போதைப் பொருளை சூறையாடும் பொலிஸ்**

கௌரவ ஜனாதிபதி அவர்களே! அண்மைய அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் நீங்கள் நாளாந்தம் பெருந் தொகையான போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப் படுகின்றன எனத் தெரிவித்துள்ளீர்கள். இவ்வாறு கைப்பற்றப்படும் போதைப் பொருள் களுக்கு என்ன நடக்கிறது என்பதை உங்களுக்கு நாம் கூறுகின்றோம். சுமார் ஒரு 100 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் 10 - 20 கிலோவே பொலிஸாரினால் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படுகிறது.

மிகுதி 80 - 90 கிலோவையும் தமக்குப் பழக்கமான போதைப் பொருள் வியாபாரிகளிடம் விற்றுப் பொலிஸார் காசாக்கிக் கொள்கின்றனர். ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டாலும் அல்லது வேறு எந்த ஒரு போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டாலும் கூட நிலைவரம் இதுவே. கைது செய்யப்படும் நபரும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் போதைப்பொருளின் அளவு குறைக்கப்படுவதால் தனது தண்டனை குறையும் என்ற காரணத்தால் சந்தோஷமாகவே இதை ஏற்றுக்கொள்கின்றனர்.

போதைப்பொருள்களில் பெருந் தொகை பொலிஸாரினால் இவ்வாறு விற்பனை செய்யப்படுவதோடு அளவைக் குறைத்து நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்வதாகக் கூறி கைது செய்யப்படும்நபரிடம்பணமும்இலஞ்சமாகப் பெறப்படுகின்றது. சிலரிடம் போதைப் பொருள்களை பறிமுதல் செய்வதோடு மேலதிகமாக விடுவிக்கப்படும் சம்பவங்களும் உண்டு.

**திருட்டுப் பொருள்களும் பொலிஸாரால் சூறை**

திருடர்கள், கொள்ளைக்காரர்கள் விடயத்திலும் இதே கதைதான். திருடன் ஒருவன் 100 பவுண் நகை யுடன் பிடிபட்டால் 20 - 30 பவுண் நகைகளே நீதிமன்றத்தில் ஒப்படைக் கப்படும். மிகுதியைப் பொலிஸாரே எடுத்துக் கொள்வர். இவையெல்லாம் கட்டுக் கதைகள் அல்ல. இவ்வாறு கொடுத்தவர்கள் பல நூறு பேரின் வாக்குமூலங்களை அறிக்கைகளாக உங்களுக்குச் சமர்ப்பிக்க முடியும். இவ்வாறு பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் குற்றங்களையும் சட்ட விரோதச் செயல்களையும், கிரிமினல் செயற்பாடுகளையும் மிக நீளமாக உங்களுக்கு எழுதிக் கொண்டேயிருக்க முடியும். இங்கே நாம் குறிப்பிட்டவை மிகச் சொற்பமே. இன்று நாடளாவிய ரீதியிலேயே பொலிஸாரின் செயற்பாடுகள் இவ்வாறானதாக இருந்தாலும் தமிழர் பிரதேசங்களில் இவர்களின் வெறியாட்டம் அதிகமாகவே காணப்படுவதற்கு நான்கு முக்கிய சம்பவங்களை உங்களுக்குச் சுட்டிக் காட்ட நாம் விரும்புகிறோம்.

**முதல் சம்பவம்**

முதலாவது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவனை மிருகத்தனமாக தாக்கிக் கொலை செய்தமை. அகோரமான சித்திரவதைகளைத் தாங்க முடியாமல் செத்துப்போன அந்த இளைஞரின் சடலத்தைக் கூட அவனது பெற்றோரிடம் கொடுக்காமல் இம்மனித மிருகங்கள் பொலிஸ் உத்தியோகத்தவர்கள் என்னும் போர்வையில் எங்கோ வன்னியில் உள்ள ஒரு குளத்தில் கொண்டு போய் வீசியெறிந்திருக்கிறார்கள். அப்பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உட்படஇப் படுபாதகச் செயலுக்கு காரணமானவர் கள் கைது செய்யப்பட்டு தண்டனைகள் வழங்கப் பட்டிருப்பதாக நாம் அறிகிறோம்.

**இரண்டாவது சம்பவம்**

இரண்டாவது - யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றார்கள் எனக்கூறி நடுறோட்டில் வைத்து நாய்களைப் போலச் சுட்டுக்கொன்றமை. இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய பொலிஸார் கைது செய்யப்பட்டு வழக்குகள் நடைபெறுவதாக அறிகிறோம்.

**வித்தியா கொலை**

மூன்றாவது- சகோதரி வித்தியாவின் கூட்டு வன்புணர்வு மற்றும் கொலை தொடர்பான சந்தேக நபர்களை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த பின்னர் இப் படுபாதக குற்றத்தின் முக்கிய சந்தேக நபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இலஞ்சமாக பெருந்தொகை பணத்தைப் பெற்றுக் கொண்டு விடுவித்தமை.

சுமார் 50 லட்சம் ரூபா வரை இலஞ்சமாகப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாக யாழ் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. சகோதரி வித்தியாவின் கொலை வழக்கு ட்ரயல்- அட் பார் முறையில் விசாரிக்க ஆரம்பித்த பின்னர் வட பிராந்தியத்திற்கு பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஒருவர் மேற்படி சந்தேக நபரை விடுவித்தகுற்றத்துடன்தொடர்புபட்டதற்காக கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

**சிங்கம்- II**

ஆயினும் மேற்படி சந்தேக நபரின் ஆள்களுக்கும் இடையில் இடைத் தரகராகச் செயற்பட்டவர் என யாழ் மக்களால் பலமாகச் சந்தேகிக்கப் படும் யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பரிசோதகர் சிறிகஜன் என்பவர் இன்னமும் கைது செய்யப் பட்டார் என நாம் அறியவில்லை. பல்வேறு விதமான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் இவர் மீது உள்ளன. இளைஞர்களை காரணமில்லாமல் கைது செய்வது, அடித்துத் துன்புறுத்துவது, பொய் வழக்குகள் போடுவது, விசாரணைக்குச்செல்லும் வீடுகளில் இளம்பெண்கள் இருந்தால் விசாரணை என்ற பெயரில் நேரத்தை நீடிப்பது, அவர்களிடம் ஆபாசமாக இரட்டை அர்த்தங்களில் பேசுவது, தொலைபேசி இலக்கங்களை கோருவது, தனது தொலைபேசி இலக்கத்தை அளிப்பது போன்ற செயற்பாடுகளுக்கு யாழ் மக்கள் மத்தியில இவரது பெயர் பிரபலமாக உள்ளது. இந்திய சினிமாப் படமொன்றின் பெயரான 'சிங்கம் - II என்பதை இவர் தனது பெயராகத் தனக்குத்தானே வைத்துக் கொண்டுள்ளார். யாழ் இளை ஞர்கள் மற்றும் மக்கள் மத்தியில் சிறி கஜன் எனக்கூறினால் பெரும்பாலானவர்களுக்கு தெரியாது சிங்கம் - II எனக் கூறினாலே அனைவரும் அறிவர். யாழ்ப்பாணத்தில் பொலிஸார் நடத்தும் கேலிக்கூத்தின் உச்சம் என இதைக் கூறலாம்.

**நான்காவது சம்பவம்**

நான்காவது - மணல் கடத்தினார் என யாழ்ப்பாணம் துன்னாலையில் இளைஞன் ஒருவன் அண்மையில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப் பட்டான். இந்த இளைஞனை சுட்டுக் கொன்ற பொலிஸார் கைதுசெய்யப் பட்டுள்ளனர் எனவும் வழக்கு நடைபெறுவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவை வெளியே தெரிந்த நான்கு சம்பவங்கள் மட்டுமே. இது மாதிரி வெளிவராத சம்பவங்கள் ஏராளம்.

பொலிஸாரின் காட்டுமிராண்டித் தனத்தால் கொல்லப்பட்ட இந்த இளைஞர்களின் தாய், தந்தையரை, சகோதர சகோதரிகளைஒரு கணம் எண்ணிப் பாருங்கள். பல்கலைக்கழக மாணவர்களும், துன்னாலை இளைஞனும் நாய்களைப் போலச் சுட்டுக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்தும் நாமே அடிவாங்குகின்றோமா எண்ணிப்பாருங்கள். சிங்கள சகோதரர்களே, மக்களே, தாய் தந்தையரே உங்களுடைய அண்ணனோ, தம்பியோ, தந்தையோ இவ்வாறு நடுத்தெருவில் வைத்து நாய்கள் போலச் சுடப்பட்டால் நீங்கள் பொறுத்துக் கொள்வீர்களா? உங்களுடைய பெண்களை ஆபாசமாக தூஷிப்பதை நீங்கள் பொறுத்துக் கொள்வீர்களா? 30 வருடங்களாக நாம் அடிகளை வாங்கியிருக்கிறோம். இந்திய இராணுவம் அடித்தது, இலங்கை இராணுவம் அடித்தது, ஆயுதக்குழுக்கள் அடித்தனர். இப்பொழுது ஜனநாயகத்தின் பெயரால் பொலிஸார் அடிக்கின்றனர். 30 வருடங்களாக எம்மை அடிக்காத தரப்பினர் எவரும் இல்லை என்றே கூறலாம்.

**நாங்கள் இங்கு இரண்டாம் தரத்தவரா?**

தென்னிலங்கை மக்களே! வட பகுதி இளைஞன் தமிழனாக இருப்பதால் அவனது உயிருக்கு இந்த நாட்டில் எதுவித மரியாதையும் இல்லையா? உண்மையிலேயே தமிழர்கள் இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள் தானா? சமானிய மனிதனுக்கு உயிர்வாழும் உரிமை இந்த நாட்டில் எந்நேரமும் பறிக்கப் படலாம் என்பதையே இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டமும், அவசரகால சட்டப் பிரிவுகளும் எமக்குத் தெரிவிக்கின்றன.

(13ஆம் பக்கம் பார்க்க...)



# சமூக சிற்பிகளாக மாற விரும்பும் ‘ஆவா’ குழு

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரின் கொடிய செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட தனிப்பட்ட நபர்கள் எவரேனும் வன்மம் கொண்டு அவர்களை வெட்டியிருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த தமிழ் இளைஞர்களையும், சிவில் சமூகத்தையும் சுற்றி வளைப்புக்கள், வீடு வீடாகச் சோதனை, விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிப்பு என நீங்கள் என்ன அந்நிய நாடொன்றின் மீது படையா எடுக்கின்றீர்கள்? ஜனநாயகம், ஜனநாயகம் என மூச்சுக்கு முந்நூறு தடவை கோஷமிடுகிறீர்கள். அதே ஜனநாயக உரிமைகளைத் தான் நாமும் உங்களிடம் கேட்கிறோம். எவரேனும் பொலிஸாரை வெட்டியிருந்தால் அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்துங்கள். நீதிமன்றம் தண்டனை வழங்கட்டும். அது தானே ஜனநாயகம்? பொலிஸார் எவ்வாறு தண்டனை வழங்க முடியும். நீதிமன்றினை விடப் பொலிஸார் அதிகாரம் வாய்ந்தவர்களா? உண்மையான குற்றவாளியைக் கைது செய்ய முடியாத தமது திறனின்மையை மறைக்க ஏற்கனவே ஏதேனும் ஒரு வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்களாகப் பார்த்து கைதுசெய்து பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டு வந்து பொலிஸ் நிலையங்களில் இருக்கும் வாள்களை இவர்களின் கைகளில் கொடுத்து கைரேகை அடையாளங்களை எடுத்தும், தமது கைத்தொலைபேசிகளில் இவர்களைப் புகைப்படம் எடுத்து நீதிமன்ற அடையாள அணிவகுப்புக்களின்போது இவர்களை அடையாளம் காட்டுமாறு சாட்சிக்காரர்களுக்கு காண்பித்தும் பொலிஸார் பதியும் வழக்குகள் உலக மகா பித்தலாட்டம். இலங்கையின் நீதித்துறையையும் நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் துச்சமாகக் கருதி கேலி பண்ணுவதற்கு ஒப்பானது இவர்களின் இந்தச் செயற்பாடுகள்

கௌரவ ஜனாதிபதி அவர்களே! இறுதியாக ஒரே ஒரு கேள்வி. நீங்களும் ஒரு மகனைப் பெற்றவர். உங்களது மகன் தஹாம் சிறிசேனவையோ, அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவையோ ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக PARROT'S PEARCH என்னும் முறையில் கொடூரமாகத் தாக்கி சித்திரவதைகளை மேற்கொண்டால், நீங்கள் இருவரும் இதைத் தாங்கிக் கொள்வீர்களா? யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சாதாரண, சாமான்ய தமிழ் குடிமகனுக்கும், மாத்தளையில் வசிக்கும் சாதாரண, சாமான்ய சிங்கள குடிமகனுக்கும் ஏன் இந்த அநியாயம்? மிக உயர்ந்த நிலையில் சுகஜீவனம் நடத்தும் அதிகார வர்க்கத்தினருக்கும் சாமானியனுக்கும் இடையில் ஏன் இந்த வேறுபாடு?

### ரணத்தைத் தான் நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம்

எண்ணிறைந்த சக மனிதர்கள் மிருகத்தைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில் வறுமை, கல்வியறிவின்மை, நோய்நொடிகள் போன்றவற்றால் பீடிக்கப்பட்ட ஒரு வர்க்கம் திருடர்கள், விபச்சாரம், கஞ்சா, ஹெரோயின், அழுக்கு, குப்பை, நாற்றம், ஏழ்மை, வறுமை, சுரண்டல், ஊழல் அரசியல்வாதிகளின் இலஞ்சம் என இந்த வர்க்கத்தின் சமூகம் அதிகாரவர்க்கத்தால் புண்ணாக்கப்பட்டு, சீழ் பிடித்து, ரணமாகிக் கிடக்கிறது. காலிலுள்ள ரணம் சீதம் பிடித்து வடிந்தால் அதைக் கவனிக்காமல் விட்டால் காலே போய்விடும். எனவே தான் நாம் ரணத்தைச் சுட்டிக் காட்டுகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் ‘ஆவா’ குழு உருவாக்கப்பட்டதாக ஒரு சில ஊடக அறிக்கைகளைக் கண்டோம். ஆவா குழுவின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர்களை உருவாக்கியவர்கள் கைதுசெய்யப்படவில்லையென்றும், அவர்களை உருவாக்கப் பிந்திய காலப்பகுதியில் மஹிந்த அரசில் தானும் அங்கம் வகித்த காரணத்தால் ‘ஆவா’ குழுவை உருவாக்கியவர்களைத் தனக்குத் தெரியும் என்னும் தொனியில் தற்போதைய அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஊடகங்களுக்கு அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார். நாமும் அதையே தான் கேட்கிறோம். அவ்வாறு இராணுவம் தான் ‘ஆவா’ குழு, அல்லது இந்த ‘ஆவத’ குழுவை உருவாக்கியிருந்தால், உருவாக்கியவர்கள் என எவரும் ஏன் கைதுசெய்யப்படவில்லை? இதுவரை அவ்வாறான எவரும் கைதுசெய்யப்படவில்லை. இனிமேலும் அவ்வாறு எவரும் கைதுசெய்யப்படவும் மாட்டார்கள். காரணம் அவ்வாறான எவரும் எம்மை உருவாக்கவும் இல்லை. எந்த ஒரு படையினருடனும் எமக்கு எந்தக் காலப்பகுதியிலும் எதுவித தொடர்புகள் இருந்ததும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான எதிர்ப்புகளைக் காட்டுவதற்கு நாம் தானா கிடைத்தோம் அமைச்சர் அவர்களே? பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகத்தின் பெயரால் கேலிக் கூத்துக்களே நடைபெறுகின்றன. இலங்கையும் அதில் ஒன்றே.



ஆக மக்கள் நல அரசுகளே தம் நாட்டின் அடித்தட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்துகின்றன. நாட்டின் கடைசி பிரஜை வரை அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு வரையான சமச்சீரான பொருளாதாரம் என்பதை சமூக முன்னேற்றம் எனக்கொள்வோம். ஜனநாயக, சிவில், உரிமைகள் அரசினால் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். சமூகநலன், மனிதகுல மேன்மை முதலிய நோக்கங்களை முன்வைத்து அரசு செயற்பட வேண்டும். அப்போதே நிம்மதியான குடிமக்களை உருவாக்க முடியும். நிம்மதி பெற்ற மனிதனே சமூக கட்டுமானத்திற்கு நல்ல வகையில் பயன் அளிப்பவனாக இருப்பான்.

### ஏற்க மாட்டார்கள்

கௌரவ ஜனாதிபதி அவர்களே! நாம் கூறிய குற்றச்சாட்டுக்களை உங்களுடைய அதிகாரிகளோ, பொலிஸ் திணைக்களமோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். நீங்களும் அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள். நாம் சேர்ந்து உண்மை எதுவென சோதித்து அறிவோம். நீங்கள் (அரசாங்கம்) கூறுவதையும் அப்படியே திரும்பச் செய்யாமல் உங்களுடன் உரையாடல்களை நிகழ்த்தவே நாமும் விரும்புகிறோம்.

ஜனநாயக அரசியலுக்குப் பலம் சேர்ப்பதாகவே அமையும் வாதப் பிரதிவாதங்களுக்கு நாம் தயாராகவே உள்ளோம்.

‘ஆவா குழு’ என இந்த நாடு முழுக்க எமக்குக் கிடைத்த எதிர் மறையான பிரசாரத்தால் இன்று எம்மை நோக்கி சாரிசாரியாக இளைஞர்கள் திரள்கின்றார்கள். இந்த இளைஞர் சக்தியை அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாசார, மொழி, பண்பாடு, மதம், இலக்கியம், தத்துவம், மனித சிந்தனை, சமகால வாழ்வியல் சிக்கல்கள், மதிப்பீடுகள், கோட்பாடுகள், தார்மீக நெறிகள், அறம், ஆன்மீகம், மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், சிவில் உரிமைகள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் போன்ற திசைகளில் சமூகபிரக்ஞை உடையவர்களாக மாற்ற இன்றிலிருந்து ஓர் அமைப்பு ரீதியாக ஒன்றிணையத் தீர்மானித்திருக்கிறோம்.

### புதிய அமைப்பு

ஒட்டுமொத்த மனிதகுல மேன்மைக்காகத் தனது மரணம் வரைப் போராடிய பேராசான் கார்ல் மார்க்ஸின் கோட்பாடுகளின் பால் ஈர்க்கப்பட்ட மாக்ஸிய பின்னணி கொண்ட இளைஞர்களின் பங்களிப்புடன் இன்று முதல் நாம் ஜனநாயக, சிவில் உரிமைகளுடன மார்க்ஸிய இளைஞர் முன்னணி (Maxist) Youth Front for Democratic and Civil rights) என்னும் அமைப்பை ஸ்தாபித்து செயற்பட ஆரம்பிக்கிறோம்.

இலங்கையில் ஊழல் மிக்க அரச திணைக்களங்களில் முதன்மையானது (Most corrupted institution)என Transparancy internaional எனப்படும் ஊழல்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பினால் தரப்பட்டிருக்கும் இலங்கைப் பொலிஸாரின் சட்ட விரோத செயற்பாடுகள் அனைத்தையும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவதே எமது பிரதான செயற்பாடாக அமையும். அங்கொன்றும், இங்கொன்றுமாக மிகவும் அரிதானவர்களாக இருக்கும் நேர்மையான பொலிஸாருக்கு எமது மரியாதைக் குரிய செவ்வணக்கங்கள் உரித்தா கட்டும்.

சக மனிதனுக்கான பொறுப்பு தன்னுடையதல்ல என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணிக் கொண்டு வாழும் காலத்தில் ‘உங்களைப் போலவே அடுத்த மனிதரையும் நேசியுங்கள்’ என்ற வார்த்தையினால் அல்லாமல் அடுத்த மனிதனைக் கொன்றால் நீங்கள் கொல்லப்படுவீர்கள் என்ற பீதியில் வைத்துத் தான் முதலாளித்துவ நாட்டுச் சட்டங்கள் மனிதகுலத்தின் எதிர்காலச் சமத்துவத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றன.

### சமத்துவம்

ஒரு நாட்டின் ஜனாதிபதியின் மகனும், தெருவில் குப்பை அள்ளுபவனின் மகனும் ஒரு பாடசாலையில், ஒரே தரமான கல்வியைக் கற்கும் வாய்ப்பை ஒரு Marxist தலைவனால் மட்டுமே வழங்க முடியும் என நாம் கருதுகிறோம். அந்த வாய்ப்புக்காக நாம் போராடுவோம்.

நட்சத்திர ஹோட்டல்களில் உலக நாட்டுத் தலைவர்கள் வறுமை ஒழிப்பு மாநாடுகளை நடத்திய போது ‘உலகத்தில் எண்பது கோடி மக்களுக்கு உண வில்லை’ எத்தன்னந்தனியாக ஐக்கிய நாடுகள் சபையில் கர்ஜித்த ‘பிடல் காஸ்ரோ’வையும், தனது அமைச்சுப் பதவிகளைஇரவோடிரவாக தூக்கி யெறிந்து விட்டு ஒடுக்கப்பட்ட இன்னொரு நாட்டு மக்களுக்காகக் காடுகளில் போராடச் சென்று பொலிவி யாவில் ஏகாதிபத்திய அரசுகளால் கொல்லப்பட்ட எமதரு மைத் தோழன் சேகுவேராவையும் எமது ஆதர்ச நாயகர்களாகக் கொள்கிறோம்.

சிங்கள மக்களே, தாய் தந்தையரே, சகோதர சகோதரிகளே, ஜே.வி.பி. இளைஞர்களை ஒரு காலத்தில் இலங்கையில் தெருத் தெருவாக டயர்போட்டு எரித்துக் கொன்றழித்தது போல் எம்மையும் கொல்லாமல் காப்பாற்றுமாறு உங்களிடம் கோருகிறோம்.

‘கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க நல்லவர்கள் எனக்கூறிகொள்வோர் அதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதே தமது காலகட்டத்தின் துயரமாகும்.’ என கறுப்பின மக்களின் விடு தலைக்காக போராடிய மார்டின் லூதர் கிங் அவர்களின் கூற்றுக்கிணங்க இலங்கையில் இருக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், நீதிபதிகள், மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International), மனித உரிமை கண்காணிப்பகம் (Human rights watch), ஆசிய மனித உரிமை ஆணைக்குழு (Asian human right commision) இந்திய தூதரகம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்கள், இடதுசாரிய அரசியல் கட்சிகள் அமைப்புக்கள், மதத்தலைவர்கள்என அனைவருக்கும் நாம் ஒரு கோரிக்கையை விடுக்கிறோம். நாம் சிறையில் இருந்தே இவ்வறிக்கையைத் தயார் செய்தோம். எம் மீதான வழக்குகள், கைதுகள் குறித்து அவதானம் செலுத்துங்கள். யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் மீது பரவலாகப் போடப்படும் குண்டு வழக்குகளின் உண்மைத் தன்மை குறித்து ஆராய விசேட ஆணைக் குழுக்களை நியமிக்க அழுத்தம் கொடுங்கள். எம் மீது பதியப்படும் வழக்குகள், குற்றச்சாட்டுக்கள் அத்தனையையும் ஜனநாயக ரீதியாக, சட்டரீதியாக சந்திக்க நாம் தயாராகவே உள்ளோம். பொலிஸாரையும் ஜனநாயக ரீதியாக, சட்ட ரீதியாக இவற்றைச் செய்யுமாறு கோருகிறோம். பொலிஸ் நிலையங்களை கண்காணிக்க பொறிமுறை ஒன்றை உருவாக்குங்கள் என எம் நாட்டுத் தலைவர்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.

இறுதியாக, இன்று சிறையிலிருக்கிறோம். நீதித்துறை எம்மை விடுதலை செய்யாது போகலாம். ஆனால், பிடல் கூறியது போல் ‘வரலாறு எம்மை விடுதலை செய்யும்.’- என்று உள்ளது. ★

# பொதுக்குழு கூட்டத்தை எதிர்க்க சசியைச் சந்திக்கின்றார் தினகரன்

பெங்களூர்.செப்.04

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவை அ.தி.மு.க. அம்மா அணிதுணைப்பொதுச்செயலாளர் தினகரன் பலமுறை சந்தித்துப் பேசி இருக்கின்றார். இந் நிலையில் அவர் இன்று சசிகலாவை சந்திக்க உள்ளார்.

இதில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூட்டவிருக்கும் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை எதிர்ப்பது குறித்து ஆலோசனை நடத்த திட்டமிட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவரைச் சந்திக்கும் போது





தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து அவர் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சசிகலா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மறுசீராய்வு மனு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. சசிகலாவுக்கு இன்னும் ஒரு வாய்ப்பு உள்ளது.

ஆனால், மறு சீராய்வு மனு போல அவசரப்பட்டு தாக்கல் செய்து இதுவும் தள்ளுபடியாகக் கூடாது என்பதில் சசிகலா உறுதியாக உள்ளார்.

இதனால் இந்த மனு குறித்து மூத்த வழக்கறிஞர்களை கலந்தாலோசித்து அதன்பிறகு இந்த மனுத் தாக்கல் செய்வது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று சசிகலா ஏற்கனவே கூறி இருக்கிறார். இதே கருத்தை இன்று தினகரனிடமும் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் வருகிற 12ஆம் திகதி அ.தி. மு.க. பொதுக்குழுவைக்கூட்ட உள்ளனர். இந் தக் கூட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடர்வது குறித்தும் சசிகலாவுடன் தினகரன் ஆலோசனை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ப)

## வகுப்பறையில் துப்பாக்கியால் சக மாணவனை சுட்ட வாலிபர்!

சண்டிகர்.செப்.4

அரியானா மாநிலம் சோனிபட்டில் உள்ள கல்லூரியில் மாணவர் ஒருவர் சக மாணவனை வகுப்பறையில் வைத்து துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரியானா மாநிலம் சோனிபட்டில் உள்ள ஐ.டி.ஐ.யில் இரு மாணவர்களுக்கிடையே நடந்த தகராறில் வகுப்பறையில் இருந்த மாணவரை சகமாணவர் துப்பாக்கியால் சுட்டார். இதில் படுகாயமடைந்த மாணவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மாணவர் வகுப்பில் இருந்த மற்ற மாணவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த



இரு மாணவர்களில் ஒருவர் தன் பையில் உள்ள துப்பாக்கியை எடுத்து மாணவனை நோக்கி சுட்டார். இதில் படுகாயமடைந்த மாணவர் கீழே விழுந்தார். பின்னர் இருவரும் ஓடி விட்டனர். இந்த வீடியோ இணையத் தளங்களில் விரைவாக பரவி வருகிறது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தலைமறைவாகியுள்ள இரு மாணவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## மூன்று மாடிக் கட்டடம் திருச்சியில் இடிந்தது!

### 4 பேர் பலி; பலர் சிக்குண்டனர்

திருச்சியில் உள்ள 3 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந் துள்ளது.

மலைக்கோட்டை அருகே உள்ள குளத்தெருவில் 3 மாடி கட்டடம் இடிந்து விபத்துக்குள்ளானது. இந்த கட்டடம் சினிமா விநியோகஸ்தர் கண்ணப்பன் என்பவருக்கு சொந்தமானது எனக் கூறப்படுகிறது.

திருச்சியில் வெள்ளிக்கிழமை கனமழை பெய்துள்ளதாலும் பக்கத்தில் இருந்த ஒரு வீடு இடிக்கப்பட்டதாலும் வலுவிழந்ததால் இந்த கட்டடம் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸாரும், மூன்று வாகனங்களில் 20 மீட்புப் படையினரும் அப்பகுதிக்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

கட்டட இடிபாடுகளில் 5 குடும்பங்களைச் சேர்ந்தோர் சிக்கியிருந்தனர் எனக் கூறப்படுகிறது. இதுவரை மீட்கப்பட்டுள்ளவர்களில் கார்த்திக் (வயது-45), ஹரிஷ் (வயது-06) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். இருவரும் தந்தை- மகனாவர்.

இந்நிலையில் ராஜாத்தி, பழனி என்பவர்களும் இறந்து விட்டனர். எனினும் ஒன்றரை வயது குழந்தை பரமேஸ்வரி உயிருடன் மீட்கப்பட்டார். ஆனால் இவரது பெற்றோர் உயிரிழந்து விட்டனர்.

இக்குழந்தை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். மேலும் இந்த இடிபாடுகளுக்குள் உள்ளவர்களை உயிருடன் மீட்கும் பணியில் பொலிஸார் மற்றும் மீட்புப்படையினருடன் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வீட்டில் வாழ்ந்த ஒரு குடும்பத்தினர் ஒரு திருமண நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டதால் அவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

## குழந்தைகள் பலியான விவகாரம்; வைத்தியர் கபில் கான் கைது!

லக்னோ.செப்.04

உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் இறந்த விவகாரத்தில் தொடர்புடைய டாக்டர் கபில்கானை சிறப்பு புலனாய்வுக் குழுவினர் கைது செய்துள்ளனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் கோரக்பூரில் உள்ள பாபா ராகவதாஸ் அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் 30 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர்.

அந்த மருத்துவமனையில் குழந்தைகள் இறந்து வருவது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக உ.பி. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், இந்த விடயத்தில் தொடர்புடைய வைத்தியர் கபில் கானை உத்தரப்பிரதேச மாநில சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கோரக்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பில் டாக்டர் கபில் கான் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'நீட்' தேர்வால் பலியான அனிதாவின் உடல் தகனம்!

நீட் தேர்வினால் மருத்துவராகும் கனவை இழந்த விரக்தியில் தற்கொலை செய்து கொண்ட மாணவி அனிதாவின் உடல் தகனம் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

'நீட்' தேர்வை எதிர்த்து வழக்கு தொடர்ந்த மாணவர்களில் அனிதாவும் ஒருவர். இவர் அரியலூர் மாவட்டம் செந்துறை தாலுகா குழுமூர் கிராமத்தைச் சேர்ந்தவர்.

இவரது தந்தை திருச்சி காந்தி சந்தையில் சுமை தூக்கும் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். தாய் இறந்து விட்டார். சிறு வயது முதலே அனிதாவுக்கு வைத்தியர் ஆக வேண்டும் என்று ஆசை.

மருத்துவ வெட்டுப்புள்ளி 196.75 என்பதால் மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தார். ஆனால் 'நீட்' தேர்வில் அவருக்கு 700 இற்கு 86 புள்ளிகள்



ஆயிரக்கணக்கானோர் நேரில் அஞ்சலி



மட்டுமே கிடைத்தது. இதனால் அவரது வைத்தியர் ஆக வேண்டும் என்ற கனவு தகர்ந்து விட்டது. உயர் நீதிமன்றம் வரை சென்று போராடியும் ஆசை நிறைவேறாமல் போனது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் வீட்டில் யாரும் இல்லாத போது தற்கொலை செய்து கொண்டார்.

இதைத்தொடர்ந்து, இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மாணவர்களும், அரசியல் கட்சியினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழக அரசு தரப்பில் அவரது குடும்பத்திற்கு ஏழு லட்சம் ரூபா நிதியுதவியும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு கல்வித்தகுதிக்கேற்ப அரச வேலையும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை முடிந்து அனிதாவின் உடல் அவரது சொந்த ஊரான குழுமூரில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

மேலும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல தலைவர்களும் நேரில் வந்து மாணவியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். வி.சி.க. தலைவர் திருமாவளவன், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், தி.மு.க. செயல்தலைவர் ஸ்டாலின், நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் ஆகியோரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர், சுமார் 11 மணியளவில் அனைத்து ஈமைச்சடங்குகளும் நிறைவேற்றப்பட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்போடு அப்பகுதியில் உள்ள மயானத்திற்கு அனிதாவின் உடல் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு, அங்கு தகனம் செய்யப்பட்டது. இதில் மாணவர்கள், பொதுமக்கள் என பல ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# தீவிரவாதிகளின் வெறிச் செயலால்; நைஜீரியாவில் 18 பேர் படுகொலை!





மைதுகுரி.செப்.04

நைஜீரியா போர்னோ மாகாணத்தின் தலைநகரான மைதுகுரியில் தீவிரவாதி களின் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 18 பேர் உயிரி ழந்துள்ளனர்.

நைஜீரியாவில் ஒரு மதத்தின் அடிப்படையிலான அரசாங்கத்தை நிறுவ வேண் டும் என்ற நோக்கத்துடன் போகோஹரம் தீவிரவாத அமைப்பினர் 2002ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு முதல் அவர்கள் ஆயுதப்போராட் டத்தைக் கையில் எடுத் துள்ளனர். ஆள்களை கடத்து வதும், படுகொலைகள் செய் வதும் அவர்களின் அன்றாட வழக்கமாகி விட்டது.

இந்தநிலையில், போர்னோ மாகாணத்தின் தலைநகரான மைதுகுரியில் இருந்து 130 கி.மீற்றர் தொலைவில் உள்ள பங்கி என்ற நகரத்துக்குள் நேற்று முன்தினம் இரவு இந்த அமைப்பைச் சேர்ந்த தீவிர வாதிகள் கைகளில் கத்தியுடன் நுழைந்தனர்.

தங்கள் கண் எதிரே பட்ட வர்களையெல்லாம் அவர்கள் சரமாரியாக கத்தியால் குத்தி இரத்த வெள்ளத்தில் சாய்த்து விட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 18 அப்பாவி மக்கள் கொல்லப்பட் டனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு படையினர் முற்றுகையிட் டுள்ளனர்.

நைஜீரியாவில் போகோ ஹரம் தீவிரவாதிகள் வீழ்த்தப் பட்டு விட்டனர் என்று இரா ணுவம் கூறியது தவறான தகவல் என்று நிரூபிக்கின்ற வகையில் சமீப காலமாக அங்கு அந்த அமைப்பினர் தீவிரவாதச் செயல்களை அரங்கேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ப)

## கென்யா பாடசாலை விடுதியில் தீ விபத்து ஏழு மாணவிகள் உடல் கருகி உயிரிழப்பு!



நைரோபி.செப்.04

கென்யாவில் உள்ள பள்ளி விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் 7 மாணவிகள் உடல் கருகி பரி தாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் காயமடைந்துள் ளனர்.

கென்ய தலைநகர் நைரோபி நகரில் மோய் பெண்கள் உயர் நிலைப் பாடசாலை செயற்பட்டு வருகிறது. புகழ்பெற்ற இந்த அர சுப் பாடசாலையில் ஆயிரத்திற் கும் மேற்பட்ட மாணவிகள் தங் கிக் கல்வி கற்று வருகின்றனர். நேற்று முன்தினம் காலை வழக் கம்போல் மாணவிகள் பள்ளிக்கு புறப்படத் தயாராகிக்கொண்டி ருந்தனர். அப்போது மாணவிகள் தங்கியிருந்த அறையில் திடீ ரெனத் தீ விபத்து ஏற்பட்டது.

இதுபற்றித் தகவல் அறிந்த தீயணைப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். எனினும் இந்தத் தீ விபத்தில் 7 மாணவிகள் உடல் கருகி உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை நடைபெற்று வருவதால் இரண்டு வாரங்களுக்கு பாடசாலை மூடப் படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த ஆண்டு நூற்றிற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு தீவைக்கப்பட்டன. அதன் தொடர் சியாக இந்தப் பாடசாலைக்கும் யாராவது தீ வைத்திருக்க லாம் என்ற சந்தேகம் எழுந்துள் ளது.

(ப)

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்!

### சுனாமி தாக்கலாம் எனப் பீதி!!

ஜகர்தா.செப்.04

இந்தோனேஷியாவில் உள்ள மென்டாவி என்ற தீவின் அருகே நேற்று 6.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டதால் சுனாமி தாக்கலாம் என்ற பீதி மக்களிடையே நிலவுகிறது.

இந்தோனேஷியா நாடு பல்வேறு தீவு களைக் கொண்டது. இது அதிக அளவில் நில நடுக்கம் ஏற்படும் நெருப்பு வளைய பகுதியில் அமைந்துள்ளது.

இதனால், அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. இதேபோல நேற்று அங்கு பூகம்பம் ஏற்பட்டது. சுமத்ராவையொட்டி யுள்ள மென்டாவி என்ற தீவின் அருகே கடலில் நிலநடுக்க மையம் இருந்தது. கட லுக்கு அடியில் 49 கிலோ மீற்றர் ஆழத்தில் அதன் மையப்புள்ளி அமைந்திருந்தது. ரிச்டர் அளவுக்கு 6.2 ஆக நில நடுக் கம் பதிவாகி இருந்தது. கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டதால் சுனாமி தாக்கலாம் என்ற பீதி மக்களிடையே நிலவுகிறது.

## வடகொரியா ஆறாவது ஏவுகணைப் பரிசோதனை ஜப்பான் கடல் பகுதியில் விழுந்ததால் பரபரப்பு!



சர்வதேச நாடுகளின் தடைகளை மீறி வடகொரியா நேற்று பரிசோதித்த நான்கு ஏவுகணைகளில் மூன்று ஜப் பான் கடல் பகுதியில் விழுந் தமையால் பரபரப்பு ஏற்பட் டுள்ளது.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந் துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பி னும், கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடு களின் எதிர்ப்பைப் பொருள் படுத்தாமலும், சர்வதேச ஒப் பந்தங்களைப் புறக்கணித்தும் அணு ஆயுதச் சோதனைகளை வடகொரியா தொடர்ந்தும் நடத்தி வருகிறது.

அந்த நாடு தொடர்ந்து மூன்று முறை அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உள் ளது. அதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி அதிரடியாக அணு குண்டை விடப் பல மடங்கு சக்திமிக்க ஹைட்ரஜன் குண்டை வெடித் துப் பரிசோதித்தது. இதுவும் அணுகுண்டு வகையில்தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்த நாடு கடந்த ஆண்டு வரை நான்கு முறை அணு குண்டுச் சோதனைகளை நடத்தி உள்ளதாக சர்வதேச நாடுகள் பதிவு செய்துள்ளன.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் காலை மீண்டும் நான்கு ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்ததாகவும், அடுத் தடுத்து விண்ணை நோக்கி சீறிப்பாய்ந்த இந்த ஏவுகணை களில் மூன்று ஜப்பான் கடல் என்றழைக்கப்படும் கிழக்கு கடல் பகுதியில் விழுந்தன எனவும் தென்கொரியா நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே கூட்டு இராணுவப் பயிற்சி நடை பெற்றுவரும் நிலையில் நேற்று நடத்தப்பட்ட ஏவுகணைப் பரிசோதனைக்கு தென் கொரி யாவும் அமெரிக்காவும் கண்ட னம் தெரிவித்துள்ளன. (ப)



# மீண்டும் புதிய தேசிய சாதனை நிலை நாட்டிய அனித்தா!

தற்பொழுது நடைபெற்று வரும் 95ஆவது தேசிய மெய்வன்மைச்சம்பியன்ஷிப் போட்டிகளில் யாழ். மெய் வன்மைச் சங்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் கலந்துகொண்ட அனித்தா ஜெகதீஸ்வரன் மீண்டுமொரு முறை புதிய தேசிய சாதனையைப் படைத்துள்ளார்.

போட்டியில் 3.47 மீற்றர் உயரம் பாய்ந்து, இம்முறை போட்டித் தொடரில் தேசிய சாதனையைப் படைத்த முதல் வீரராக இடம்பிடித்துள்ளார். முன்னதாக கடந்த வருடம் நடைபெற்ற தேசிய மெய்வன்மைத் தகுதிகாண் போட்டிகளில் 3.46 மீற்றர் உயரம் தாவி புதிய தேசிய சாதனை படைத்த அவர், ஒரு வருட காலப்பகுதியில் அதே சாதனையை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

95ஆவது தேசிய மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகள் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் போட்டிகளுக்கான 2ஆம் நாளான நேற்று முன்தினம் பெண்களுக் கான கோலூன்றிப் பாய்தல் இறுதிப் போட்டி நடைபெற்றது.

அண்மைக் காலமாக கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்ற தேசிய சாதனைக்குச் சொந்தக்காரியான அனித்தா உள்ளிட்ட வட மாகாணத்தைச் சேர்ந்த 2 வீராங்கனைகள் இப்போட்டியில் போட்டியிட்டிருந்தனர்.

இதில், கடந்த சில வருடங்களாக தேசிய அரங்கில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாதனைக்கு மேல் சாதனைகளைப் படைத்து வருகின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன், பாடசாலை மட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு பங்குபற்றிய முதலாவது தேசிய மட்டப் போட்டியாக இது அமைந்திருந்தது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் 3.30 மீற்றர் உயரம் பாய்ந்த அனித்தா, பிறகு 3.47 மீற்றர் உயரத்துக்கான முயற்சியை மேற்கொண்டார். அதன் முதல் முயற்சியில் தோல்வி கண்ட அவர், 2ஆவது முயற்சியில் வெற்றி கொண்டு புதிய சாதனை படைத்தார். எனினும் 3.50 மீற்றருக்காக அவர் மேற்கொண்ட 3 முயற்சிகளையும் அவரால் வெற்றி கொள்ள முடியாமல் போனது.

இந்நிலையில், கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.சுபாஸ்கரனின் பயிற்றுவிப்பின் கீழ் தனது பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்ற அனித்தா, கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தாய்லாந்து திறந்த மெய்வல்லுனர் போட்டித் தொடரில் முதற்தடவையாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சாதனை படைத்த பிறகு அனித்தா வழங்கிய விசேட செவ்வியில்-

தேசிய சாதனையை மீண்டும் புதுப்பிக்க முடிந்தமை மகிழ்ச்சியளிக்கிறது. எனது வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்து வருகின்ற எனது பயிற்சியாளர் பாஸ்கரன் ஆசிரியருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தகுதிபெறுவதற்கான பயிற்சிகளை தற்போது முதல் நான் முன்னெடுத்துள்ளேன். எனவே, 3.80 மீற்றராக உள்ள ஆசிய அடைவு மட்டத்தை விரைவில் எட்டுவதற்கு எண்ணியுள்ளேன். அதற்கான எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள போட்டித் தொடர்களில் சிறப்பாக விளையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இப்போட்டியில் இலங்கை விமானப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட எஸ்.பி ரணசிங்க 3.20 மீற்றர் உயரம் பாய்ந்து 2ஆவது இடத்தையும், யாழ். மெய்வன்மை சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட யாழ். மகாஜனாக் கல்லூரி மாணவியான சந்திரசேகர் செளினா, 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து 3ஆவது இடத்தையும் பெற்றனர். செளினா தேசிய மட்டத்தில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தார்.

முன்னதாக இவ்வருடம் நடைபெற்ற ஜோன் டார்பட் சிரேஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்காக கோலூன்றிப் பாய்தலில் 3.01 மீற்றர் உயரத்தை பாய்ந்து புதிய போட்டிச் சாதனை படைத்த செளினா, கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகள் போட்டிகளில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் புதிய தேசிய சாதனை படைத்தமையுடன், அதே போட்டியில் பெண்களுக்கான நீளம் பாய்தலில் 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# முதலாவது அரையிறுதியில் வென்றது டயமன்ஸ் அணி!

(கங்கா)

சென்.அன்ரனீஸ்அணியை இலகுவாக வீழ்த்தி அரையிறுதியின் முதலாவது வெற்றியை தனதாக்கியது வதிரி டயமன்ஸ் அணி.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழ கம், யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, அதிலிருந்து 8 அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று, காலிறுதியாட்டங்களாக நடைபெற்றன.



காலிறுதியாட்டங்களில் இருந்து வதிரி டயமன்ஸ், பாஷையூர் சென்.அன்ரனீஸ், நாவாந்துறை சென்.நீக்கிலஸ், பலாலி விண்மீன் அணிகள் அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன.

அரையிறுதியாட்டங்கள் லீக் முறையில் நடத்தப் படுகின்றன. அந்தவகையில் முதலாவது லீக் அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் தொடக்கம் முதல் டயமன்ஸ் அணியினர், ஆட்டத்தை தம்பக்கம் வைத்திருந்தனர். அதன் பயனாக முதலாவது கோலை டயமன்ஸ் அணி அடித்தது. 2ஆவது பாதியிலும் டயமன்ஸ் அணியின் ஆதிக்கம் நிலை பெற இரண்டாவது கோலையும் டயமன்ஸ் அணி அடித்தது.

எனினும், இறுதி நேரத்தில் விடாது போராடிய சென். அன்ரனீஸ் அணி, ஒரு கோலைப் போட்டு, போட்டியை உற்சாகமாக்கியது.

எனினும், அதன் பின்னர் சுதாகரித்தாடிய டயமன்ஸ் அணி, ஆட்டத்தைக் கட்டுக்குள் வைத்திருந்தது. முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (ப)


# உலகக் கிண்ணத்தில் நேரடியாக பங்குபெறும் வாய்ப்பைப் பறிகொடுக்கும் நிலையில் இலங்கை!

கடந்த 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண சம்பியனான இலங்கை கிரிக்கெட் அணி, அடுத்த உலகக் கிண்ணத்தில் பங்குபெறுவதை உறுதி செய்ய தற்போது இந்திய அணியுடனான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இரண்டு வெற்றிகளை பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. அந்த இரண்டு வெற்றிகளையும் பெறத் தவறியிருக்கும் இலங்கை அணி, 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் நேரடியாகப் பங்குபெறும் வாய்ப்பை இழக்கும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 15 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள (50 ஓவர்களிற்கான) ஐ.சி.சி. இன் உலகக் கிண்ணத்தில் நேரடியாக பங்குபெறும் அணிகள் யார் என்பதை தீர்மானிக்கும் இறுதி திகதியாக செப்ரெம்பர் 30 உள்ளது. குறிப்பிட்ட அந்த திகதியில் உலகக் கிண்ணத்தினை நடத்தும் நாடான இங்கிலாந்தோடு சேர்த்து ஒரு நாள் தரவரிசையில் முதல் 7 இடங்களிற்குள் உள்ள அணிகள் நேரடியாக உலகக் கிண்ணத்தில் விளையாடத் தகுதி பெறும்.

ஆனால், தற்போது இந்திய அணி தொடரில் 4:0 என முன்னிலை வகிப்பதால் இலங்கை உலகக் கிண்ண நேரடித் தகுதியினைப் பெற, மேற்கிந்திய தீவுகள் அணி தமக்கு வரும் அடுத்த ஆறு போட்டிகளில் ஒன்றில் தோல்வியடையும் வரை பொறுத்திருக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியுள்ளது.

அத்தோடு இந்த நிபந்தனையுடன் இருக்க இலங்கை அணி ஞாயிறு நடைபெறும் இந்திய அணியுடனான இறுதி ஒரு நாள் போட்டியில் வெற்றி பெறவும் வேண்டும். அப்போட்டியில் வெற்றி பெற்றவுடன் ஒருநாள் தரவரிசையில் இலங்கை அணியின் புள்ளிகள் 88 ஆக மாற்றமடையும். எனினும் இப்புள்ளிகளும் இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் நேரடியாக பங்குபெறுவதை உறுதி செய்யப் போதுமானதாக இருக்காது.



ஏனெனில், மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்ததாக அயர்லாந்துடனும் (செப்ரெம்பர் 13 ஆம் திகதியிலும்), அதற்கடுத்ததாக ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இங்கிலாந்துடனும் (செப்ரெம்பர் 19 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை) விளையாடவுள்ளது.

இந்தப்போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்றால் மேற்கிந்திய தீவுகள் அணியும் ஒரு நாள் தரவரிசையில் 88 புள்ளிகளைப் பெறும். இப்புள்ளிகளை தசம தானத்தில் நோக்கும்போது மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கையை விட முன்னிலையில் காணப்படும். இதனால் இலங்கை அணியின் நேரடி வாய்ப்பு பறிபோக கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

ஒருவேளை, இலங்கை அணி தொடரினை 5:0 என இந்தியாவிடம் பறிகொடுத்தால், உலகக் கிண்ண நேரடி வாய்ப்பினை மேற்கிந்திய தீவுகள் பெற இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரை 4:1 என கைப்பற்றினால் மாத்திரம் போதுமாக இருக்கும்.

உலகக் கிண்ணத்திற்கு நேரடித்தகுதியினைப் பெறாத நாடுகள் அனைத்தும், 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகான் தொடரில் விளையாடி அதன் மூலம் அடுத்த உலகக் கிண்ணத்திற்கு தகுதியைப் பெற வேண்டும்.

இந்த தகுதிகாண் தொடரில், ஐ.சி.சி யின் ஒரு நாள் தரவரிசையில் இறுதி நான்கு இடங்களை பெற்ற அணிகளும், ஐ.சி.சி இன் உலக கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடரில் (ICC World Cricket League Championship) முதல் நான்கு இடங்களை பெற்ற அணிகளும் ஐ.சி.சி இன் உலக கிரிக்கெட் லீக் (ICC World Cricket League) தொடரில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகளும் பங்குபெறும்.

இந்தத் தகுதிகாண் தொடரில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள், 2019 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தில் பங்குபெறும் மேலதிக இரண்டு அணிகளாக மாறி, தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்குபெறும். (ப)

# சென்னையில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியும் பாசறையும்!





(கங்கா)

இந்தியாவின் சென்னை மாநகரின் ஜெ.ஜெ உள்ளக விளையாட்டு அரங்கில் இசின்ரியு கராத்தே பயிற்சிப் பாசறை மற்றும் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் இலங்கை சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ரநசனல் ஸ்ரீலங்காகழக மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

15 - 16 வயதுப்பிரிவு காட்டா போட்டியில் பி.றுகேசன் தங்கப் பதக்கமும், குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கமும் பெற்றார்.

13 - 14 வயதுப் பிரிவு காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் அபிசேக் ஆகாஸ், வெண்கலப் பதக்கம் பெற்றார்.

கறுப்புப்பட்டி பிரிவினருக்காக காட்டா போட்டியில் எஸ். கபில்ராஜ் தங்கப்பதக்கம் பெற்றமையோடு, குமித்தேயில் வெண்கலப் பதக்கமும் பெற்றார்.

சிரேஷ்ட கறுப்புப்பட்டி பிரிவினருக்கான காட்டாப் போட்டியில், சி.சாந்தரூபன் வெள்ளிப்பதக்கமும், குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

இவர்களது பிரதம பயிற்றுநரான அன்ரோ டினோஸ், பயிற்றுநர்களுக்கான காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றார்.

இந்தச் சுற்றுப்போட்டியைத் தொடர்ந்து, அமெரிக்காவில் இருந்து வருகை தந்த இசின்ரியு கிராண்ட் மாஸ்டர் கிறிஸ்டோபர் சேஸ்ஸால் நடத்தப்பட்ட கராத்தே பயிற்சிப் பாசறையிலும் இவர்கள் பங்குபற்றினர்.

(ப)

# மலிங்கவின் வீட்டில் வெற்றியைக் கொண்டாடிய இந்திய வீரர்கள்!



கொழும்பு, செப்.04

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து மலிங்க அளித்த விருந்தில் இந்திய வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வந்தது. சொந்த மண்ணில் இலங்கையை புரட்டியெடுத்து வரும் இந்திய அணி முதல் 3 ஆட்டங்களில் முறையே 9 விக்கெட், 3 விக்கெட், 6 விக்கெட் வித்தியாசங்களில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றி விட்டது. இந்தியா-இலங்கை அணிகள் இடையிலான 4ஆவது ஒரு நாள் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க தனது வீட்டில் இரு அணிகளுக்கும் இரவு விருந்து அளித்தார். இதில் கலந்து கொண்ட இந்திய வீரர்கள் நிகழ்ச்சியில் எடுத்த படங்களை சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளனர்.(ப)

## ஜகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சித்திரவதை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அடுத்த 24 மணி நேரத்தில் இந்த விவரணப்படத்தை சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

இந்த விவரணப் படத்தை கெலம் மெக்ரே தயாரித்துள்ளார். இவர் ஏற்கனவே இலங்கையின் போர் குற்றங்கள் தொடர்பான இரண்டு விவரணப் படங்களை தயாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் ஜகத் ஜயசூரிய, போர் நடைபெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடு பட்டார் எனக் குற்றம் சுமத்தி சர்வதேச மனித உரிமை அமைப்பொன்றுபிரேஸிலில்உட்பட இரண்டு நாடுகளில் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது.

## யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமானது.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சி மடம் விநாயகர் வித்தியாலயத்தில் இந்த நடமாடும்சேவை நடைபெற்றது.

'அரசசேவை உங்களுக்காக' என்னும் தலைப்பில் பொதுமக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துவைக்கும் வகையில் இந்தச் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகளுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் திருமதி.வி.சிவப்பிரியா தலைமையில் நடைபெற்றபோது அமைச்சர் மனோகணேசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் –

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த காலங்களில் சொல்லொண்ணா துன்பங்களை எதிர்கொண்ட மாவட்டம்.பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்ட மாவட்டம். யுத்தம் முடிவடைந்தாலும் அந்த யுத்த திற்கான அடிப்படைக் காரணங்களும் மூலகாரணங்களும் உள்ளன. அவற்றுக்கு எந்த முடிவும் காணப்படவில்லை.

யுத்தம் இல்லை,சத்தமில்லையென்றால் பிரச்சினை முடிந்துவிட்டது என்று அர்த்தம் இல்லை. யுத்தம்தான் இல்லை. பிரச்சினை இருக்கின்றது.அந்த பிரச்சினைகளுக்கு நாங்கள்படிப்படியாக தீர்வினை கண்டுவரு கின்றோம்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் பதிலளிக்கவேண்டிய கடப்பாடு எங்களுக்கு உள்ளது. தமது உறவுகளுக்கு நடந்தவை பற்றியதை தெரிவிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது.

இந்த காணாமல்போன சம்பவங்கள் கடந்த மஹிந்தவின் ஆட்சிக்காலத்திலேயே நடந்தன. அந்தப் பாவங்களைக் கழுவும் செயற்பாட்டையே நாங்கள் மேற்கொண்டுவருகின்றோம். இந்த ஆட்சிக்காலத்தில் காணாமற்போகும் நிலைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஆட்சிக்காலத்தில் யாரும் காணாமற்போகவில்லை. யாரும் கடத்தப்படுவதுமில்லை. கொல்லப்படுவதுமில்லை. யாரும் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதுமில்லை. இது இந்த ஆட்சியை ஏற்படுத்தியமைக்கு கிடைத்தவெற்றியாகும்.

எனக்குத் தமிழ்ப்பற்று மட்டுமல்ல, தமிழ் திமிரும் இருக்கின்றது. எனதுசமயத்தை, மொழியை மதிப்பவன் நான்.நான்யாருக்கும் அடிபணியாதவன். நேர்மை, நீதியின்படியே நடக்கக்கூடியவன். அதன் காரணமாக சிங்கள மக்களின் மனப்பற்றையும் அவர்களின்மொழிப்பற்றையும் உணர முடிகின்றது.

இந்த நாடு தனியொரு இனத்துக்கு சொந்தமான நாடு அல்ல. பல்லின மக்கள் வாழும்நாடு. எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த நாட்டில் ஒரே இனம், ஒரே மக்கள் என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். நாங்கள் ஒரே நாட்டின் பிள்ளைகள் என்று சொன்னால் அது அனைத்து இனமக்களும் சமத்துவமாக இருக்கவேண்டும். – என்றார்.

## எந்தத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக்கட்சியை ஜனநாயக கட்சியாக பலப்படுத்துவதுடன், பௌத்த மதகுருமார், மருத்துவர், ஆசிரியர், விவசாயி, தொழிலாளர், மீனவர் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட அனைத்து சமூக சக்திகளும் ஒன்றிணைந்த விரிவான அரசியல் இயக்கமாக கட்டியெழுப்ப வேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றமையை சிலர் தவறு எனக் குற்றஞ்சாட்டுகின்ற போதும், அவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டாட்சியை அமைத்திராவிடில், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களை எமது நாட்டினால் எதிர்நோக்கியிருக்க முடியாது என்றும் ஜனாதிபதி கூறினார்.

நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரையே ஐக்கிய தேசியக் கட்சி தேர்ந்தெடுத்தமையினால் கூட்டாட்சியை ஒத்துழைப்புடன் கொண்டுசெல்ல முடியுமானதாக அமைந்ததென அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருக்கும் வரை சுதந்திரக் கட்சியுடன் இணையப்போவதில்லை எனச் சில தரப்பினால் வெளியிடப்பட்டிருந்த செய்தியை நினைவூட்டிய ஜனாதிபதி, நாடு சவால்களை எதிர்நோக்கியிருந்த சந்தர்ப்பங்களில் அவற்றிலிருந்து நாட்டை மீட்டு, முன் னோக்கிக் கொண்டு செல்வதற்காக அரசியல், இன, மத, மொழி பேதங்களின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்ட பல உலகவரலாறுகள் காணப்படுகின்றன என்றார்.

ஊழல், மோசடிகள் மற்றும் குடும்ப அதிகாரம் என்பவற்றை அரசியலிலிருந்து நீக்க வேண்டும். அதிகாரத்தை தனது நன்மைக்காக உபயோகிக்காது நாட்டினதும், மக்களினதும் நன்மைக்காகவே பயன்படுத்த வேண்டும், அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதும் அதிகாரத்திலிருந்து நீக்கப்படுவதும் மக்களின் அபிலாஷைகளுக்கேற்பவே நடைபெற வேண்டும். – என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியும் அதிகாரத்தை உடையவர்கள் அல்லர். மக்களே உண்மையான அதிகாரத்தை உடையவர்கள் என்றும் தெரிவித்தார்.

மகா சங்கத்தினரும் ஏனைய சமய தலைவர்களும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் மற்றும் முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரட்ன உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெருமளவான கட்சி ஆதரவாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (உ)

## உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பா பிள்ளை அமிர்தலிங்கத்தின் 90ஆவது பிறந்த தின நிகழ்வும் நூல் வெளியீடும் நேற்று மாலை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சம்பந்தன் உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்கள்தமது இறைமையைப் போர்த்துக்கீசரிடம் இழந்தனர். அதற்குப்பின்னர் இலங்கை ஒரே நாடு என்ற அடிப்படையில் தான் செயற்பட்டு வருகின்றது.

ஆனால், பண்டா – செல்வா, டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று தான் எழுதப்பட்டன. தொடர்ந்தும் நாம் அவ்வாறே கோரி வருகின்றோம்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.தமிழர்கள்தொடர்ந்து ஏமாற்றப்பட்டனர். அந்தக் காரணத்தாலேயே தமிழ் இளைஞர்கள் வெளியக சுய நிர்ணய அடிப்படையில்தீர்வைப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானமும் அந்த அடிப்படையில்தான் எழுந்தது. இப்போது நாம் மீண்டும் உள்ளகசுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வைக் காண்பதற்கே முயன்று கொண்டிருக்கின்றோம்.

13 ஆவது அரசமைப்புதிருத்தம்ஒருசிறந்த ஆவணமாக இருக்கின்ற போதிலும், அது தமிழ் மக்களின்பிரச்சினைக்கு ஒருதீர்வாக அமையாது எனநாம் 1988 ஆம் ஆண்டே பகிரங்கமாகக் கூறினோம். தமிழர் விடுதலைக் கூட்டணி அதை முற்றுமுழுதாக நிராகரித்திருந்தது. அந்த அரசமைப்புத்திருத்தத்தின் அடிப்படையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலிலும் நாம் போட்டியிடவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்டு, அமிர்தலிங்கத்தின் உதவியுடன், அவரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட எமது பாதை மிகவும் கடினமானது.

அண்ணன் அமிர்தலிங்கம் 1989 ஆம் ஆண்டு இறந்திருந்தாலும் அவர் ஆரம்பித்த அந்தப் பாதை, அந்தப் பயணம் இன்று வரை தொடர்கின்றது.

சந்திரிகாவின் காலத்தில் அரசியல் திருத்தம்சட்டமாகநாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதில் பொதுப்பட்டியல் இல்லை. பல விடயங்களில் அது அதிகஇடைவெளிகளைக்கொண்டதாக அமைந்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் ஒஸ்லோவில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசங்களில் ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி ஆராயப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இதேபோன்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அமைக்கப்பட்ட நிபுணர் குழு மற்றும் சர்வகட்சிக் குழுக்கள், அதிகூடிய அதிகாரப் பகிர்வுடன் தீர்வு வரவேண்டும், மக்களின் பாதுகாப்பும் அடையாளங்களும் உறுதிசெய்யப்பட வேண்டும், அயல் நாடான இந்தியாவின் அரசியல்யாப்பைகற்கவேண்டும் என்பன போன்ற விடயங்களை வலியுறுத்திதமது வரைவுகளைச் சமர்ப்பித்திருந்தனர். இவை அனைத்தும் அமர்த்தலிங்கத்தின் காலத்திற்குப் பின்னர் நடைபெற்றவை.

தமிழர் விடுதலைக் கூட்டணி 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை 1988 ஆம் ஆண்டு நிராகரித்ததுடன், அது ஒரு முடிவான தீர்வாக அமையாது எனக் கூறிய காரணத்தாலேயே இப்போது புதிய செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று வரை நாங்கள் அந்தக் கருமங்களில் ஈடுபட்டு வருகின்றோம்;.

எமதுமக்களுடைய இறைமையின் அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் எமக்கு போதியளவு சுயாட்சி கிடைக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

மேலும், இலங்கையில் ஏற்படுத்தப்படும் அரசியல்தீர்மானங்களில் இராணுவத்தினரின் கை ஓங்குவதை ஏற்க முடியாது. அத்தீர்மானங்கள்முற்றுமுழுதாக அரசியல் ரீதியாகவே ஏற்பட வேண்டும் என்பதையே நாம் இந்தியாவுக்குக் கூறி வருகின்றோம். இக்கருத்தை அமிர்தலிங்கமும் தெளிவாகவும் உறுதியாகவும் கூறிவந்தார்.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நாங்கள் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவின் உதவிச் செயலாளரை சந்தித்திருந்தபோது இந்த விடயங்களை அவர்களுக்குத் தெளிவாக விளக்கிக்கூறியிருந்தோம்.

எமக்கு எந்தவிதமான தீர்வு வேண்டும் என்பதை அவரிடத்தில் தெரிவித்திருக்கின்றோம். எங்களுடைய நியாயமான கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் கூடிய ஆதரவை வழங்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

நாங்கள் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதும் நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கு எப்போதும் தயாராகவே இருந்துள்ளோம். எமது நிலைப்பாடு நியாயமானது. நாம் அநீதியாகவோ, நியாயமற்ற முறையிலோ எதையும் கேட்கவில்லை.

தற்போது எமக்கு சர்வதேச ஆதரவு பெருகி வருகின்றது. இவற்றிற்கு மேலாக எமது மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது மக்கள் குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குப் பின்னால் ஒற்றுமையாக இருந்தார்கள். அதை நாம் மதிக்கின்றோம். ஏனெனில், அது மிகவும் பெறுமதியான ஒரு விடயம். அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அத்தகைய ஒற்றுமையை நாம் குலைத்துவிடக்கூடாது. நாங்கள் நியாயமான கோரிக்கையின் பின்னாலேயே ஒருமித்து நிற்கின்றோம் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியிலும் இன்று ஒரு மாற்றம் ஏற்பட்டிக்கின்றது. தற்போதைய நிலை தொடருமாயின் தங்களுக்கும் அது எவ்வித நன்மையையும் தரப்போவதில்லை என்பதை அவர்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த நாடு தற்போதுள்ள நிலையில் இருந்து மீட்கப்பட வேண்டுமாயின், பொருளாதார கஷ்டங்களில் இருந்து விடுபட வேண்டுமாயின், பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படா விட்டால் இந்நாட்டிற்கு ஓர் எதிர்காலம் இல்லை. இதுவே உண்மை.

அமிர்தலிங்கம் சிறந்த ஒரு சட்டத்தரணி. ஆனால், அவர் தனது தொழிலையோ, குடும்பத்தையோ சரிவரக் கவனிக்கவில்லை. மாறாக அவர் தன்னை முழுமையாகவே தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்திருந்தார். அவர் இறக்கும் வரையில் இடம்பெற்ற சலக கருமங்களிலும் அவர் பெரும் பங்காற்றியிருந்தார். அவர் மறைந்த பின்னரும் அவரது பயணமே இற்றைவரை தொடர்கின்றது.

அவர் தொடக்கி வைத்த பயணத்திற்கு விரைவில் ஒரு முடிவு வரும். எமது மக்களுக்கு நியாயமான, நிதானமான, ஒழுங்கான ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அதனைப் பெற்றுத் தருவதற்கு சர்வதேச சமூகமும் தன் பங்களிப்பைச் செய்ய வேண்டும். – என்றார். (ம-07)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றுவார்.

★ "அரசமைப்பாக்க அவையில் தமிழர் முன் வைக்க வேண்டியது: தமிழ்த் தேசத்தைத் தற்காத்துக் கொள்ளும் தீர்வையா? 'நடைமுறைச்சாத்தியம்' என்னும் பெயரில் சிங்களம் திணிக்க முற்படுவதையா?" என்றதலைப்பில் அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் உரையாற்ற அதற்கான பதிலுரையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்குவார்.

★ "ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் சமஷ்டி சாத்தியமா? புதிய அரசமைப்பு 'ஒற்றையாட்சி', 'சமஷ்டி' என்ற பதங்கள் தாங்கி வெளிப்படையாக இனங்காட்டப் பட வேண்டுமா?" என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் கு.குருபரன் உரையாற்ற அதற்கான பதிலுரையை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் வழங்குவார்.

★ "வடக்கு, கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும்'' என்ற தலைப்பில், ஓய்வுபெற்ற ஆசிரியரும், சட்டத்தரணியுமான சி.அ. யோதிலிங்கம் உரையாற்ற அதற்கான பதிலுரையை சித்தி லெப்பை ஆய்வு மையத் தலைவரும், சட்டத்தரணியுமான மௌசூர் மௌலானா வழங்குவார்.

★ "புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்க, சீன, இந்திய நலன்களை விளங்கிக் கொள்ளல்" என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறைத் தலைவர் கே.ரி. கணேசலிங்கம் உரையாற்ற அதற்கான பதிலுரையை தமிழரசுக் கட்சி மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்குவார்.

கடைசியாக 'அரசமைப்பு உருவாக்க முயற்சியின் போக்கு' என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் உரையாற்றுவார்.

சிரேஷ்ட அரசியல்ஆய்வாளர் குசல் பெரேரா தொகுப்புரையை நிகழ்த்துவார். (உ)

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** பூதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன் மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, GPSறோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி கிளிகடை வரை, பூங்கனிச்சோலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# 40 தாதியர்களுக்கு உடனடி நியமனம் வழங்க சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பணிப்பு!

கொழும்பு, செப். 04

ஹட்டன் - டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் நிலவும் தாதியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 40 தாதியர்களுக்கு உடனடியாக நியமனத்தை வழங்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பணித்துள்ளார்.

டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் நிலைமைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணனுக்கும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கும் இடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சகல வசதிகளும் கொண்ட ஒரு வைத்தியசாலையாக டிக்கோயா ஆதார வைத்திய சாலை இயங்கி வருகின்ற போதும் தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவு உட்பட்ட பல பிரிவுகள் தாதியர் போதாமை காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த நிலைமையை வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி வைத்தியர் எஸ்.விஜேதுங்க, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.





அதன் பின்னர் இராஜாங்க அமைச்சர் வைத்தியசாலைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமையை நேரில் கேட்டு அறிந்துள்ளார்.

அதன் பின்னர் இராஜாங்க அமைச்சர், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை தொடர்பு கொண்டு இந்த வைத்தியசாலை உட்பட நுவரெலியா மாவட்டத்தின் ஏனையவைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் சுகாதார அமைச்சில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சரின் செயலாளர்கள், மத்திய மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளின் மருத்துவ அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் பயனாக தாதியர் இன்றி ஸ்தம்பிதம் அடைந்திருந்த டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு 40 தாதியர்களுக்கு உடனடியாக நியமனத்தை பெற்றுக் கொடுங்கள் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

## மன்னாரில் திடீர் மின் தடை; பாதிப்பை எதிர்நோக்கும் மக்கள்!

மன்னாரில் கடந்த சில தினங்களாக திடீர் மின் தடை ஏற்படுவதால் தாங்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் என அப்பகுதி மக்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் இந்தப் பிரச்சினை காணப்பட்ட போதும், பின்னர் சற்றுக் குறைவடைந்திருந்தது. இந்த நிலையில் கடந்த சில தினங்களாக மீண்டும் இரவு, பகல் பாராது திடீர் மின் தடை ஏற்படுகின்றது.

இதனால், பெறுமதியான மின் உபகரணங்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றமை தொடர்பில் மன்னார் மின்சார சபைக்கு தொடர்பை ஏற்படுத்தினால் உரிய பதில் வழங்கப்படுவதில்லை.

அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றமை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் யாரும் முன்வருவ தில்லை.

எனவே, தொடர் மின் தடைக்கான காரணத்தை அறிந்து சீர் செய்ய மன்னார் மின் அத்தியட்சகர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# எரிபொருள் நிலையத்தில் எண்ணை கசிவு; குடிதண்ணீர் மாசடைவதால் மக்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, செப். 04

எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் எண்ணை கசிவினால் குடிதண்ணீர் மாசடைகின்றமைக்கு கண்டனம் தெரிவித்து குயில்வத்தைப் பகுதியில் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வட்டவளைப்பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு - ஹட்டன் பிரதான வீதியின் குயில்வத்தைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள்நிரப்புநிலையத்திற்கு அருகிலே நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.



இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கீழ் பகுதியில் வசிக்கும் 25 குடும்பங்கள் வரை சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில்கசியும்கனிய எண்ணை குடிதண்ணீர் நிலைகளில் கலப்பதனால் குடிதண்ணீர் பாதிப்படைந்துள்ளது என ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில்வட்டவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதை அடுத்து ஆர்பாட்டகாரர்கள் கலைந்து சென்றனர்.

## நாவற்காடு கிராமத்தில் அறநெறி வகுப்புக்கள் ஆரம்பம்!





முள்ளியவளை சர்வ மகா கூட்டத்தில் பொது மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய நாவற்காட்டு கிராமத்தில் நேற்று அறநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களிடையே அறம் சார்ந்த செயற்பாட்டினையும் மாணவர்களின் எதிர்காலத்தையும் வளப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு இந்த அறநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை - நாவற்காட்டு கிராமத்தைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த அறநெறி வகுப்புக்களால் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 450 பட்டதாரிகள் ஆசிரியர்களாக இணைக்கப்படவுள்ளனர்!

கொழும்பு, செப். 04

மேல்மாகாணப் பாடசாலைகளுக்கு மேலும் 450 பட்டதாரிகள் ஆசிரியர்களாக இணைக்கப்படவுள்ளனர் என அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மேல் மாகாண நுண்கலை நிலையத்தில் எதிர் வரும் திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளன என மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் தொவித்துள்ளார்.

நியமனங்களைப் பெறுவோருக்கு நான்கு வார காலப் பயிற்சிகள்வழங்கப்படவுள்ளன.

மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் இது தொடர்பான நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ள உள்ளனர்.

## சவர்க்காரத்துக்குள் கஞ்சா கடத்திய கைதியின் மனைவி கைதானார்!

கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனது கணவனுக்கு சவர்க்காரத்திற்குள் கஞ்சாவை மறைத்து வைத்து கொடுத்த மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள கைதியான தனது கணவரை கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் பார்வையிடச் சென்ற போது சவர்க்காரக் கட்டிக்குள் 2 கிராம் கஞ்சாவை மறைத்து வைத்து சிறைச்சாலைக்குள் சென்றுள்ளார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பரிசோதனைக்குட்படுத்தப் பட்ட போது, சவர்க்காரத்திற்குள் கஞ்சா இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இந்தப் பெண்ணை யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான்நீதிமன்றில் ஆஜர்ப் படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற் கொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir







யாழ். பொது நூலகக் கேட்போர்கூடத்தில் நேற்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 90 ஆவது பிறந்த தின கூட்டம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## ஒட்டுசுட்டானில் நேற்று விபத்து; ஒருவர் பலி, மூவர் படுகாயம்



முல்லைத்தீவு,செப்.04

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்; மூவர் படுகாயமடைந்தனர். நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

முச்சக்கரவண்டிஒன்றும் பாரஊர்திஒன்றும்நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

இதில் முச்சக்கர வண்டியில் பயணித்த வசந்தபுரம் கற்சிலை மடுவைச் சேர்ந்த ஜெனந்தன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்கள் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பார ஊர்தியின் சாரதி கைது செய்யப்பட்டார். ஒட்டுசுட்டான்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மரத்தில் மாம்பழம் பறித்தவர் கொப்பு முறிந்து வீழ்ந்து மரணம்

### உடுப்பிட்டியில் பரிதாபம்

யாழ்ப்பாணம், செப்.04

மாம்பழம் பறிப்பதற்கு மரத்தில் ஏறி விழுந்து படுகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசையா பத்மநாதன் (வயது 57)என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 27 ஆம் திகதி தனது வளவினுள் உள்ள மாமரத்தில் ஏறி மாம்பழம் பறிக்க அவர் முயற்சித்துள்ளார். மரக் கொப்பு முறிந்ததில் கீழே விழுந்த அவர் மயக்கமடைந்தார். தேடிவந்தஅவரதுமனைவி கணவன் கீழே வீழ்ந்து மயக்கமடைந்து கிடக்கின்றமையைக் கண்டு உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு மாற்றப்பட்டார். நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

இறப்பு தொடர்பில் விசாரணைகளையாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின்திடீர்இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## நாமலுக்கு விஜயகலா பதிலடி

யாழ்.புங்குடுதீவுமாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதான சந்தேகநபராக கருதப்படும் சுவிஸ் குமாரை காப்பாற்றுவதற்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உதவினார்எனத்தெரிவித்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிறுவர் விவகார இராஜாங்கஅமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உடன்பதவிவிலகவேண்டும் எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில்சிலகருத்துக்களை பதிவேற்றியிருந்தார்.

இதற்கு பலரும் தமது தரப்பு கருத்துக்களை பதிவிட்டு வந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் பதில் தெரிவித்துள்ளார்.

உங்களது பதிவுநீதிமன்றத்தையும், நீதிமன்றத்தின் நடவடிக்கைகளையும் அவமதிப்பதாக அமைகின்றது. நீங்கள் முதலில் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு பிறகு டுவிட்டரில் பதிவிடுங்கள் என தெரிவித்துள்ளார். மேலும், நான் சட்டத்தின்படி பொது மக்களின் வன்முறைகளையே தடுத்து நிறுத்தினேன். இலங்கையின் சட்டம் ஒரு சிலருக்கு மட்டும் உரித்தானதாக இருக்கக்கூடாது என பதில் தெரிவித்துள்ளார்.

## பண்டாரவளையில் நில வெடிப்பு; 150 குடும்பங்கள் வெளியேற்றம்

பண்டாரவளைப் பகுதியில் நேற்று பெய்த அடைமழை காரணமாக வீடுகள் மற்றும்நிலங்களில்வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மனிதவுரிமைகள் கேந்திர நிலையம் அறிவித்துள்ளது.

திக்அராவ, கிணிகம, வலஸ்பெத்த, அப்புஹாமி வீதியில் உள்ள பகுதிகளில் இவ்வாறு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தப் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்றதகவலின் அடிப்படையில், இவ்வாறான 48 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பானது என உறுதிப்படுத்தப்பட்ட வீடுகளில் வெயில் தாக்கம் ஏற்பட்ட பின்னர் அவற்றின் பிளவுகள் அதிகரித்துள்ளன. தரையோடுகள் மற்றும் சிமெந்து பூச்சுக்களில் வெடிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அந்த பகுதியிலிருந்து 150 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என பதுளை மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் மேலும் சில குடும்பங்கள் வெடிப்புகள் ஏற்பட்டுள்ள வீடுகளிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இசைப்பிரியா கைது தொடர்பில் சரத் பொன்சேகா புதிய தகவல்

### ஜகத் ஜயசூரியவைச் சிக்க வைக்கும் எத்தனம்

கொழும்பு, செப்.04

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம் ஒன்றில் இருந்தே இசைப்பிரியா கைது செய்யப்பட்டார் என்றதகவலை முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்னாள் இராணுவத் தளபதியான ஜகத் ஜயசூரிய மீது சுமத்தும் வகையில் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பொன்சேகா தற்போது மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் படைத் தளபதிகளான மேற்படி இருவருக்கும் இடையே விரிசல்கள் அதிகமாகி வரும் நிலையில், இராஜகிரியவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பின்போதே பொன்சேகா மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

ஜகத்ஜயசூரிய இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் சிலர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், பலர் காணாமலும் போயிருந்தனர். இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், "யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், வவுனியாவில் உள்ள முகாம் ஒன்றிலிருந்து இசைப்பிரியா கைது செய்யப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போது ஜகத் ஜயசூரிய போன்றவர்கள் தான் அனைத்துக்கும் பொறுப்பாக இருந்தார்கள்" என பொன்சேகா கூறியுள்ளார்.

எனினும், இதுபோன்ற சம்பவங்களுடன் பெரும் எண்ணிக்கையிலான படையினர் தொடர்பு பட்டிருக்கவில்லை எனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இசைப்பிரியா கைது செய்யப்பட்ட பின்னர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப் பட்ட –அதிர்ச்சிதரும்– படங்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.